


Echoes of Endurance

தாங்குதலின் எதிரொலிகள்

33 Prayers for Grace Amid Grief

துயரத்தில் கிருபைக்கான 33 ஜெபங்கள்

These prayers were born in the long night of the soul— in seasons of hidden tears and unspoken grief, when rejection wore many faces: overqualified yet unwanted, unqualified yet burdened with vision, passed over, misunderstood, cast aside.

They rose from the crucible of countless small deaths— micro-wounds of daily despair, macro-shadows of loss and isolation, emotional tempests, spiritual wilderness, physical darkness that words fail to name.

Yet in the deepest valley, a whisper remained: “Thank You, Father.”

These letters to Heaven were penned not in triumph, but in trembling trust— raw, unpolished, honest before the Throne.

And now, by the mercy of the Father, in the Name of the Lord Jesus Christ, and through the fire of the Holy Spirit, these private cries are released as public light— that any fellow traveler in the shadows might find companionship on the road, and glimpse the dawn that always follows the darkest hour.

May every reader who opens these pages hear the same gentle voice that carried the writer: “You are not alone. I have heard every prayer. The morning comes.”

To the glory of the One God— Father, Son, and Holy Spirit— whose perfect Oneness turned my midnight into song.

Amen.

இந்த ஜெபங்கள் ஆத்துமாவின் நீண்ட இரவில் பிறந்தன— மறைந்த கண்ணீர்களும் பேசப்படாத துயரங்களும் நிறைந்த காலங்களில், நிராகரிப்பு பல முகங்களை அணிந்திருந்தபோது: அதிக தகுதியுடையவனாக இருந்தும் விரும்பப்படாதவன், குறைந்த தகுதியுடையவனாக இருந்தும் பார்வையால் சுமக்கப்பட்டவன், புறக்கணிக்கப்பட்டவன், தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டவன், ஒதுக்கிவைக்கப்பட்டவன்.

அவை எண்ணற்ற சிறு மரணங்களின் உலையிலிருந்து எழுந்தன— தினசரி துயரத்தின் சிறு காயங்கள், இழப்பு மற்றும் தனிமையின் பெரிய நிழல்கள், உணர்ச்சிக் காற்றழுத்தங்கள், ஆவிக்குரிய பாலைவனங்கள், சொற்களால் விளக்க முடியாத உடல் இருள்.

ஆனால் ஆழ்ந்த பள்ளத்தாக்கிலும், ஒரு முணுமுணுப்பு இருந்தது: “நன்றி, பிதா.”

இந்த சொர்க்கத்திற்கான கடிதங்கள் வெற்றியில் எழுதப்படவில்லை, ஆனால் நடுங்கும் நம்பிக்கையில்— மூலமானவை, பளபளப்பற்றவை, சிங்காசனத்திற்கு முன் நேர்மையானவை.

இப்போது, பிதாவின் இரக்கத்தால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் தீயால், இந்த தனிப்பட்ட அழுகைகள் பொது ஒளியாக வெளியிடப்படுகின்றன— நிழல்களில் பயணிக்கும் எந்த சக பயணியும் பாதையில் தோழமையைக் காணட்டும், மிக இருண்ட மணிநேரத்திற்குப் பின்னர் எப்போதும் வரும் விடியலைப் பார்க்கட்டும்.

இந்த பக்கங்களைத் திறக்கும் ஒவ்வொரு வாசகனும் எழுத்தாளரைத் தாங்கிய அதே மென்மையான குரலைச் செவிமடுக்கட்டும்: “நீ தனியாக இல்லை. நான் ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்டேன். காலை வருகிறது.”

ஒரே கடவுளின் மகிமைக்காக— பிதா, மகன், பரிசுத்த ஆவி— அவருடைய சரியான ஒருமை என் நள்ளிரவை பாடலாக மாற்றியது.

ஆமென்.

06-07-09

இயேசுவே, என் தெய்வமே என் உயிரினும் மேலான தேவனே!!!
இனிமையான இந்த நாளுக்காக நானும்மை ஸ்தோத்தரிக்கின்றேன்
இன்றியமையாத உம்முடைய அன்பிற்காக ஏங்கி நிற்கின்றேன்.
உம்முடைய சித்தம் எதுவோ அதை என்னில் நீர் தொடரப் போகின்றீர்
இதோ அடியேன் உள்ளேன். என்னை எடுத்து பயன்படுத்தும்
நான் உம்முடைய இரத்தத்திற்காக காத்திருக்கின்றேன்.
என்னுடைய பாவங்களை அகற்றியும் மன்னியும்!!
என்னை உம்முடைய செல்லப் பிள்ளையாக மாற்றிக் கொள்ளும்
இதோ, என் அக்கிரமங்கள் என்னை சூழ்ந்து இருக்கின்றன!!
என்னுடைய மீறுதல்கள் என் உடலை சுற்றி அடருகின்றன.
என்னை மன்னியும். நான் பாவி. மகா பாவி. பிரதான பாவி.
இறைவா என் இயேசுவே உம்மை எனக்கு மிகவும் பிடிக்கும்
என் தேவனே என் இராஜனே நீரின்றி என்னால் வாழ முடியாது.
நீர் எனக்கு வேண்டும். பல மடங்கு அன்பு வேண்டும்.
உம் கிருபை வேண்டும். உம் வல்லமை வேண்டும்.
உம்மைப்போல பிறரை நான் அன்பு செய்ய வேண்டும்.
உம்மைப்போல வாழ்ந்து உம்மில் நான் மரித்து
உமக்காகவே உயிர்த்தெழுந்து உன்னதத்திற்கு செல்ல வேண்டும்
எல்லா நன்மைகளும் எல்லா பரலோக ஆராதனைகளையும்
நானும் சேர்ந்து உமக்கு முன்பாக படைக்க வேண்டும்.
இறைவா, பிசாசின் தந்திரங்களை அறிந்து விலக வேண்டும்.
ஞானமுள்ளவனாக நான் பிறருக்கு முன்னே நடக்க வேண்டும்.
இறைவா, உம்முடைய அன்பை பிறருக்கு பகிர்ந்திட வேண்டும்.
ஆராதனை இயேசுவே என் இராஜாவே நீர் வாழ்க வாழ்க
உம்முடைய அரசு சீக்கிரத்தில் இறங்கி வருவதாக.
நான் உம்மை மெய்யாகவே நேசிக்கின்றேன்.
உம்மிடம் நான் அதிக நேரம் செலவிட விரும்புகிறேன்.
உம்மையே நான் எனக்கு பிரதானமாக கொண்டேன்.
இயேசுவே என் பரிகாரியே, எனக்கு பெலனானவரே நீர் வாழ்க.
உம்மை அல்லாமல் எனக்கு வேறு யாருண்டு என் தேவனே
என்னை நேசிக்கின்ற என் நல்ல தகப்பனே நீர் வாழ்க.
உம் நாமம் வாழ்க. உம் அரசு வாழ்க. சீக்கிரம் வருவீராக.
என் இராஜாதி இராஜா உம்மை நான் அன்பு கூருகிறேன்
என்னை விரும்புகிற என் ஜோதி ஜெயவரே உம் மகிமை வாழ்க
உம்முடைய வல்லமை இப்பூமி முழுமையும் விளங்குவதாக.
அல்லேலூயா ஆமென். அல்லேலூயா ஆமென்.

07-07-09

என் ஜீவனை விட இயேசுவே உம்மை நான் அதிகம் நேசிக்கின்றேன்
என் வாழ்வில் நான் உம்மையே நான் தேடி ஓடுகிறேன்.
உம்முடைய உயிர்த்தெழுதலின் மகிமையை ஏங்கி ருசிக்கின்றேன்.
இறைவா என் இயேசுவே நான் உம்மை நிச்சயம் விரும்புகிறேன்.
இராஜாதி இராஜனே, ஒருவராய் பெரிய அற்புதங்கள் செய்கிறவரே!!
என்னை நிர்மூலமாக்காது உயிருள்ளவனாக நிறுத்தியுள்ளீர்!!
இதோ அடியேன்!? உமது கண்களுக்கு மறைவாக நான் இல்லை.
இம்மானுவேல், எங்களோடு ஜீவனாய் இருப்பவரே நீர் வாழ்க.
என்னை தினந்தோறும் பரிசுத்தப்படுத்தி பாதுகாத்திடும்.
இதோ காலம் சீக்கிரமாய் வருகிறது. உமது வருகை தாமதிப்பதில்லை
ஆண்டவரே என் அன்பே, உயிரான, அழகின், சொரூபமே!
உம்மை உயர்த்தி நான் போற்றிப் பாடியே மகிழ்ந்திடுவேன்.
உம்முடைய கற்பனைகளை தியானித்து என்றும் அக மகிழ்வேன்.
எல்லாவற்றிற்கும் மேலாக நான் உம்மை அன்பு செய்கின்றேன்
இராஜா, நான் உம்மிடத்தில் ஒன்றைக் கேட்பேன் தருவீரா?!
நான் மாற வேண்டும். உம்மைப்போல பரிசுத்தமாக வேண்டும்.
உம் நினைவாகவே நான் வாழ்ந்து சீக்கிரம் உம்மிடம் சேர வேண்டும்.
உங்க முகத்தை நான் பார்க்க வேண்டும். உம்மை தொடணும்.
என்னுடைய சுதந்தரம் நீரே. உம் இராஜ்யத்தை நான் தேடணும்.
நான் மகிமையானவற்றையே நாட வரணும். அது உம்மிடம் தானே?!
காத்திருக்கின்றேன். உம்மை உள்ளத்தின் ஆழத்திலிருந்து போற்றுகின்றேன்
என் பரிகாரியே! என் பரிசுத்தரே! என் பரலோக இராஜாவே!!
நீங்க போதும் இயேசப்பா. உங்க சமுகம் எனக்கப்பா!
உம்முடைய வல்லமையால் என்னை நிரப்பி நீங்க காக்கணும்.
அதிசயங்கள் செய்பவரே என் எளிய ஜெபத்தை அங்கீகரியும்.
நான் செய்வது இன்னது என்று நானறியேன். சரியானவர் சொல்லும்
இதோ அடியேன்! இதோ அடியேன் நீங்க மாத்திரம் போதும்.
வல்லமை வேண்டுமே. பரிசுத்தம் வேண்டுமே. நீங்க வாழ்கவே
அதிசயரே என்னை ஆட்கொண்டும். எடுத்து என்னை பயன்படுத்தும்
வாழ்த்துகிறேன் உம்மை என் முழு உள்ளத்தினால் ஆமென்.
தேவனே உம் திருமுகம் நான் கண்டு மகிழ்ந்து போக வேண்டும்.
ஆராதனைக்குரிய என் ஆண்டவரே நீர் வாழ்க வாழ்க வாழ்க
உம்மால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. ஒன்றுமே இல்லை.
துதி கன மகிமை யாவற்றையும் உமக்கே நான் செலுத்துகிறேன்
இறைவா நான் உம்மையே மகிமை செய்து பாடி விரும்புகிறேன்
கிருபையால் நான் என்றென்றும் நிலைநிற்கின்றேன். ஆமென்.

08-07-09

உம்முடைய நாமம் என்றென்றைக்கும் பரிசுத்தப்படக்கடவது.
உலகமெங்கிலும் உமது நாமம் மகிமைப்படுத்தப்படுவதாக!!
உம்முடைய மேலான நாமத்திற்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.
உயர்வான உம்முடைய மகிமையை நான் என்றும் உணருகிறேன்.
இயேசுவே உமக்குத்தானே கனத்தை செலுத்துகிறேன்.
அரசாளும் தேவனே உம்மை எப்பொழுதும் ஆராதிக்கின்றேன்.
இறைவா, உம் பெயரைச் சொல்லியே நான் வாழ்கின்றேன்.
அன்பே உருவான என் ஆண்டவரே, அதிசயங்கள் செய்பவரே
இங்கே தனியாய் அமர்ந்து இதை எழுதச் செய்பவரே!!
எழுதவும், ஞானத்தை வெளிப்படுத்தவும் உதவும் பரிசுத்த ஆவியானவரே!
உமக்கே ஆராதனை செய்கின்றேன். உமக்கே நான் தாசன்.
உமக்கே நான் அடிமை. உமக்கே நான் சொந்தமானவன்.
அதிசயங்களை செய்யும் இயேசு கிறிஸ்துவே, பிதாவின் குமாரனே?!
மனுஷ குமாரனே?! மகிமைக்கு சொந்தக்காரரே!! நீர் வாழ்க.
உமக்குள்ளே நான் மறைவாக நலமுடன் அடைக்கலம் புகுவேன்
உன்னதத்தின் கூடாரத்திலிருந்து உம்மை ஆராதித்து போற்றிடுவேன்
அன்பே என் ஆறுதலே உம்மை மாத்திரம் தொழுதிடுவேன்.
உம்முடைய ஜீவத்தண்ணீரை நான் பருகி திருப்தியடைவேன்
உம்முடைய ஜீவ விருட்சத்தில் கனியை நான் புசிப்பேன்.
உம்முடைய இராஜ்ஜியத்தில் நான் சேர்ந்திடுவேன்
தூதர்களோடும், பரிசுத்தவான்களோடும் உம்மை நான் ஆராதிப்பேன்
கனிதரும் மரமாக நான் உம்மில் வேர்கொண்டு வளருவேன்
என் பாதைக்கு உம்முடைய கற்பனைகளே வெளிச்சம்.
என் கால்களுக்கு உம்முடைய தீபமே போதுமானது.
நான் தேடுவது உம்மைத்தானே - என் சிறு வயது முதல்.
இறைவா நான் இன்னும் உம்மை கிட்டிச்சேர வேண்டும்.
உம்முடைய அழகான தோட்டத்திலே நானும் ஒரு மலராக வேண்டும்.
உம் தோட்டத்தை நானும் அழகு படுத்த வேண்டும்.
உம்முடைய புனிதமான ஸ்தலத்தை என்னால் அழகு செய்யக் கூடுமோ?
இராஜனே என் தேவனே நீர் என்றென்றும் நல்லவர்.
பொய் சொல்லாதவர். இரக்கம் நிறைந்தவர். பிதாவின் சித்தம் செய்தவர்.
இராஜனே என் தெய்வமே உமக்கே மகிமை துதி கனமும்.
நல்லவரே எனக்கு நன்மைகள் செய்தவரே நான் மறவேன்.
உம்மை மறவேன். என்றென்றும் உம்மையே வேண்டிடுவேன்.
நீர் அதிசயமானவர், நீர் தூயவர் உம்மில் நான் களிகூருவேன்
என் எல்லாமும் நீரே. என் பரிகாரியும் நீர் மாத்திரம் தானே!!

09-07-09

இயேசுவே, நான் உம்முடைய மகிமையை காண ஆசை கொள்கிறேன்
உம்மை காணவே என்னுள்ளம் ஏங்கித் தவிக்கிறது.
மான்கள் நீரோடையை தேடித் தவிப்பதைப் போல நான் தவிக்கின்றேன்
இறைவா மான்களுக்கு கிடைத்தது. எனக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.
இயேசுவே நான் தேடுவது உம்மிடத்தில் தானே உள்ளது.
நான் ஏங்குவதும் அதற்குத்தானே என் இயேசுவே நீர் வேண்டுமே !!
பூரண அழகுள்ளவரே, என் லீலி புஷ்பமே, குன்றுகளின் ரோஜா மலரே
சாலேமின் இராஜாவே, சாரோனின் ரோஜாவே நீர் வாழ்க.
உயிருள்ள தேவாதி தேவனை நான் ஆராதிக்கின்றேன்,
மகிமைப்படுத்துகிறேன், மேன்மைப்படுத்துகிறேன் என்று எந்நேரமும் போது
என்னுள்ளம் துள்ளுகிறது. உம்மை தினம் துதிப்பாடுகின்றது.
அன்புள்ளம் படைத்தவரே, என்னை ஆளுபவரே நீர் வாழ்க.
எல்லையில்லாத உம் கிருபைகளுக்காக நான் தலை வணங்குகின்றேன்
கருணையுள்ளம் படைத்தவராம் என் பரிசுத்த ஆவியானவர்
என்மேல் நீர் அசைவாடுகின்றீர். அபிஷேகம் செய்கின்றீர்.
ஆறுதல் தந்து அதிசயிக்க செய்கின்றீர். அன்பு கூறுகின்றீர்.
நீரின்றி ஒரு அணுவும் அசையாது. உம்மாலே ஆகாதது ஒன்றுமில்லை.
எனக்காக நீர் முள்முடி சுமந்தீர், என்னை சிலுவையில் சுமந்தீர்.
உமக்கு நிகரானவர் இவ்வுலகில் நான் கண்டதில்லை.
எல்லாவற்றிலும் உம்மை நான் மகிமைப்படுத்தவே விரும்புகிறேன்.
என்னுடைய புதியவைகள் யாவும் உம்மை மகிமைப்படுத்தவே !!
இறைவா என்னுள்ளம் உம்மையே சுற்றிச்சுற்றி வருகிறது.
நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை.
தேவனே எனக்கு கற்றுத்தாரும். அனல் கொண்டவனாக உருவாக்கும்.
பரிசுத்த ஆவியானவரே எனக்கு ஆலோசனை சொல்லும்.
பரலோக தகப்பனே பாவியான என்னை ஒருவிசை மன்னியும்.
என்னுடைய சாபங்களை எல்லாம் முறித்துப்போட்டு என்னை சுகமாக்கும்
நான் உம்மை எல்லா நிலைகளிலும் மகிமை படுத்துவேன்
என்னுடைய வழிகளிலெல்லாம் என்னை காக்கும்படிக்கு
தேவ தூதர்களுக்கு நீர் கட்டளை கொடுத்து என்னை பாதுகாக்கின்றீர்.
உயிருள்ளவரே, என் உறைவிடமே நான் ஒன்றுமில்லை.
உம்மையே நான் சேர என்னுள்ளம் பூரணமாக தவிக்கின்றது.
உம்மைவிட்டு ஒரு நிமிடம் பிரிந்திருப்பினும் மனம் புண்படுகின்றது.
நான் நித்திய ஜீவனுக்குள் நான் புதிய நாளை எதிர்பார்க்கின்றேன்
காலையில் பூத்து மாலையில் மறையும் மலரைப் போல நானே!
உம்மில் இருந்தால் இதோ இப்பொழுதே மரணத்தை ஜெயிப்பேன்.!!

10.07.09

எனக்காக ஜீவனை விட்டவரே, என்றும் என்னோடே இருப்பவரே
உமக்கு நான் பிரியமானவனாக இருக்கிறேனா? இல்லையா?!
என் இராஜாவே, என் இரட்சகரே யூத இராஜ சிங்கமே!
மேசியாவே, மென்மையானவரே, மேகஸ்தம்பமானவரே!
உம்மை அல்லாமல் நான் நேசிக்கும் மனிதர் இங்குண்டோ?!
ஆனாலும் உம்மையன்றோ நான் அதிகம் நேசிக்கின்றேன்.
பசுமையான நினைவுகள் என் ஆவியில் நிறைந்திருக்கின்றன.
என்னோடு நீர் பேசின நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன்.
ஸ்தோத்திர பலிகளை ஏறெடுப்பேன். உம்மையே அன்பு கூறுவேன்
நான் நினைப்பதை காட்டிலும் என்னை நீர் நேசிக்கின்றீர்.
நன்மைகளை செய்தவரே நன்றி பலி சொல்லிடுவேன்
நீதியின் பாதையில் நான் நடந்தே சென்றிடுவேன்.
இயேசப்பா உம்முடைய இரத்தத்தை நான் பருகிடுவேன்.
உம்முடைய உடலை நான் உணவாக புசித்திடுவேன்.
ஏனெனில் உம்மைப்போல நானாக ஆசைப்படுகிறேன்.
பிதாவின் சித்தத்தை அறிந்து செயல்பட்டு முடிந்து போகணும்.
என் ஐயவரே, பரிசுத்தமாக நான் வாழ வேண்டும்.
பரலோக வாழ்க்கையை இப்பூமியிலே நான் வாழணும்.
இறைவா, உம்முடைய ஆவியானவர் என்னை வழிநடத்த வேண்டும்.
கன்மலையானவரே, என்னை காக்கும் தெய்வம் நீரே.
வல்லமையும் - மகிமையும் உமக்கே செலுத்திடணும்.
எனக்கு பிரியமானவரே, மங்காத வெளிச்சமானவரே,
துன்பமில்லாத வாழ்வொன்று நான் உம்மிடம் கண்டேன்.
என்றுமே என்னுடைய அடைக்கலமானவராம் நீர் தானே.
எல்லாவற்றிலும் நானும்மை புகழ்ந்து பாடி போற்ற வேண்டும்.
ஆளுகை செய்பவரே, என் அன்பே அதிசயங்கள் செய்பவரே
உம்மையே என் நண்பனாக நான் விரும்புகிறேன்.
என் எழுத்துகளில் உம்மை நான் மகிமை செய்கின்றேன்.
என் எழுத்துக்களையும் நீர் பரிசுத்தப்படுத்தி தாருமே.
இத்தரணியில் நான் உம் புகழ் பாடி மகிழணும்.
தேசமெங்கிலும் உமது நாமத்தை முழங்க வேண்டும்.
உலகமெங்கிலும் எழுப்புதல் தீ பரவ வேண்டும்.
உன்னதத்திலிருந்து உமது ஒளி பிரகாசிக்க வேண்டும்.
எங்கள் முகங்கள் உமது பிரசன்னத்தால் மூடப்பட வேண்டும்
இரட்சகரே, என்னை உம் கரத்தில் தந்துவிட்டேன்
பாவம் செய்யாமல் பரிசுத்தமாக இருக்க ஆசைக்கொண்டேன்!!?

11.07.2009

என்னுடைய சிருஷ்டிகரே. உயிரோடு இருப்பவரே நீர் வாழ்க.
உம்முடைய வல்லமை இப்பூமி முழுவதும் பெருகியிருப்பதாக.
நீர் மாத்திரம் எனக்குப் போதும். உம்முடைய அன்பொன்றே போதும்.
உம்முடைய இராஜ்ஜியத்திலே நீர் வரும்போது என்னை நினைத்தருளும்
தெய்வமே, என் பரிசுத்தமானவரே, என் பரலோக இராஜாவே,
எல்லாவற்றிலும் மேலாக உம்மை நான் விரும்புகிறேன்.
எல்லையில்லா கிருபையினால் என்னை திருப்திப்படுத்துகிறீர்.
உம்முடைய ஆவியினால் என்னை அபிஷேகம் செய்கின்றீர்.
உலகம் என்னை வெறுத்தாலும் நீரென்னை வெறுப்பதில்லை.
நான் ஒரு பேதை. எனக்கு வழிகாட்டும். அதிலே செல்வேன்.
காற்றால் ஆடும் நாணலைப்போல என் மனம் அலைமோதுகிறதே!
ஒரு மனத்தினால் நான் நிலைத்தோங்கிட வேண்டுமென்கிறேன்.
தயவினால் என்னை காத்துக்கொள்ளும். அன்பினால் பூரணமாக்கும்
தூய்மையானவரே, துதிகளில் மகிழ்வோனே நீர் வாழ்க.
என்னை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் செய்திடும்.
அனல் கொண்டு எழும்பிட என்னை பரிசுத்தப்படுத்திடும்.
கன்மலைத் தேனினால் என்னை மகிழ்வுறச் செய்திடும்.
பரமண்டல வாழ்வை சீக்கிரமாக எனக்குத் தந்தருளும்.
இணைமாக்கும் வரத்தினால் என்னை பெலப்படுத்தும்.
தீர்க்கதரிசன வரத்தினால், ஆவியினால் என்னை அலங்கரியும்.
அற்புதங்களை செய்யும் வல்லமையினால் என்னை நிறைத்திடும்.
அந்நிய பாஷைகளினால் என் வாயை நிறைவுப்படுத்தும்.
வியாக்கியான வரத்தினால் தெளிவடைய செய்திடும்.
பிசாசை துரத்தும் அதிகாரத்தை எனக்குத் தந்திடும்.
விசுவாசத்தை என் இதயத்தில் தினமும் பல மடங்காக அதிகப்படுத்தும்
இராஜனே, என் தேவனே எந்தன் கன்மலையானவரே
என்னை காத்துக்கொள்ளும். நான் உமக்கு சொந்தமானவன்.
உயிருக்குயிராக உம்மை நான் நேசிக்கின்றேன்.
என் மனம் உம்மையே பற்றியிருக்கிறது. பரிசுத்தத்தை விரும்புகிறது
அதிசயப்படுத்தும் என் ஆவியானவரே என் அன்பே உறவானவரே
உம்முடைய இரத்தத்தினால் என்னை இரட்சித்தீரே நன்றி நன்றி.
கிருபையுள்ள தேவனே என் கண்மணியானவரே வாழ்க வாழ்க.
நித்தியமான என் நிரந்தரமானவரே உம்மை நான் நிரந்தரமாக்கவும்
நிகழ்காலமும், எதிர்காலமும் எனக்கு வேண்டாம். நீர் மாத்திரம் போதும்
அழகானவரே, அற்புதம் செய்பவரே அன்பே என் மகிமையானவரே
நீர் வாழ்க. என்றென்றும் வாழ்க வாழ்க வென்பேன்.

12.07.09

பரிசுத்தரே பரிசுத்தரே என்னை படைத்த என் பரம தகப்பனே
என்னை மாத்திரம் அல்ல எல்லாரையும் இரட்சிக்கும் இராஜனே
உம் நாமம் என்றென்றும் மகிமைப்படுத்தப்படுவதாக ஆமென்.
உம் நாமம் அதிசயம் என்று எல்லாவிடத்திலும் போற்றப்படுவதாக.
எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் என்று உலகம் அறியப்படுவதாக.
எல்லாவற்றிற்கும் மேலாக பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருப்பவரே
நல்லவர்களில் எல்லாம் நீர் ஒருத்தர் மாத்திரமே நல்லவர்
பெரியவர்களில் எல்லாம் நீர் ஒருத்தர் மாத்திரமே பெரியவர்
தூயவர்களில் எல்லாம் நீர் ஒருத்தர் மாத்திரமே தூயவர்
பரிசுத்தவான்களில் எல்லாம் நீர் ஒருத்தர் மாத்திரமே பரிசுத்தர்
கல்வாரியில் எந்தன் நாயகன் எனக்காக பலியானீர்
அல்லாமல் நான் உமக்கு என்னையே ஒப்புக்கொடுத்தேன்.
இல்லத்தை உமது ஆலயமாக நான் மாற்றியமைத்தேன்.
எல்லாமும் என்னில் பரிசுத்தமாக்கப்பட்டது. உமது இல்லமான
உள்ளமெல்லாம், என் ஏக்கமெல்லாம் உம் சித்தம் செய்வதுதானே
அன்பே உருவான என் அன்பின் தெய்வமே உம்மை அன்பு செய்கிறேன்
ஆமென். ஆமென். ஆண்டவரே உம்மை வரவேற்கின்றேன்
பரிசுத்த ஆவியானவரே உம்மை நான் வரவேற்கின்றேன்
நீர் நல்லவர் தாமே என்னை முழுவதை பரிசுத்தமாக்கும் இயேசுவே.
ஏதோ என்னில் நடக்கிறது. என் தலை எண்ணெயால் நனைகிறது.
ஆவியானவரோ அவரின் தூதர்களோ என்னோடு கூடவே இருக்கின்றனர்
முழங்கால் போடும் போதும், கண்மூடி தியானிக்கும் போதும்
உம்முடைய தீண்டுதல்களால் நான் மகிழ்வடைகின்றேன்.
உந்தன் நாமம் மகிமைப்படுத்த என் இதயம் ஆயத்தமாகின்றது.
என் ஆவி உம்மை மாத்திரமே ஏங்கித் தவிக்கின்றது.
சாத்தான் பலவித அக்கினியாஸ்திரங்களை எய்து என் மனத்தை
உலகத்தின் பக்கம் சாய்க்க நினைத்தாலும், என்னோடு இருக்கும்
பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினாலும், ஆலோசனையினாலும்
இயேசுவே உமது பரிசுத்தத்தையே நாடி என்னுள்ளம் வாழ்கின்றது
உம்மாலே நான் எப்பொழுதும் மகிழ்வுடனே இருக்கிறேன்.
இராஜாவே உமக்குள்ளே நான் ஒரு நிம்மதியுடன் இருப்பேன்.
உம்மாலே நான் தங்கும் புகுந்து இளைப்பாறுதல் அடைவேன்
ஆண்டவரே எல்லா அதிகாரமும் உடையவரே நீர் வாழ்க.
உம் நாமம் என்றென்றும் உயர்த்தப்படுவதாக ஆமென்.
இறைவா எனக்கும் வேண்டும் உம் கிருபை, அதிகம் வேண்டுமே
புன்னகையின் மகிமையினால் என்னை மூடிக்கொள்ளும். ஆமென்.

13-07-09

இராஜனே என் தகப்பனே என் சுதந்தரமானவரே நீர் வாழ்க.
நீர் என்றாலும் ஆசீர்வதிக்கப்பட்டவர், ஸ்தோத்திரம் உமக்குரியது.
அன்புள்ளம் கொண்டவராம் என் ஆண்டவர் இயேசு கிறிஸ்து
உம்மை என் உதடுகளால் துதிப்பாடி நன்றி சொல்கிறேன்.
ஆண்டவராம் என்னை காவல் செய்பவராம் நீரே நீர் மாத்திரமே.
உந்தன் நாமம் என்றென்றும் மகிமைப்படுத்தக் கடவது!
இதோ உம்முடைய மகிமையை காண ஏங்கி நிற்கின்றேன்.
சத்துருவின் கோட்டைகளை தகர்த்தெறியும் வல்லமை கொண்டேன்.
எல்லாவற்றையும் தூக்கி தள்ளிவிட்டேன். உம்மையே பற்றிக் கொண்டேன்
இறைவா என் கரத்தை நீர் பிடித்துக்கொண்டிருக்கின்றீர்
என் வழியை எனக்கு நீரே தெரியப்படுத்திக்கொண்டிருக்கின்றீர்.
இராஜனே என் இயேசு மகா இராஜனே நீர் வாழ்க.
உமது நாமம் போற்றப்படுவதாக அன்பரே அழகுள்ளம் கொண்டவரே
உம்மை ஆராதிக்கின்றேன். உம்மையே தேடித் திரிகின்றேன்.
என்னை உம்முடைய கரத்திலே ஒப்புக்கொடுத்தேன்.
என்னை சூழ்ந்து திரளான சத்துருக்கள் எண்ணங்களின் வழியிலே
என்னை சுற்றியும் அந்தகார லோகாதிபதிகள் சூழ்ச்சிகள் செய்தாலும்
என் நேசர், யூதாவின் இராஜ சிங்கம் அவர்களை சிதறடிப்பார்.
நான் சுகமாய் என் தேவனில் நான் இளைப்பாறியிருப்பேன்.
என்மேல் கிருபையாய் இருக்கும் என் தேவ குமாரன் நீர்.
என்னை பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கின்றீர்
எனக்குள்ளே நல்ல மாற்றத்தை நான் விரும்புகிறேன்
என்றென்றும் உம்மை மாத்திரமே நான் என் தேவனாக கொள்கிறேன்
என்னை வழிநடத்தும். என் தலைமுறையும், என் வழித்தோன்றலும்
உறவுகளை உம் வருகை தாமதமானால் உம்மையே விரும்பட்டும்.
என்னை காட்டிலும் பல மடங்கு மேன்மை அவர்கள் அடையட்டும்.
நேயரே என் இதயத்தில் பிரியமாய் இருக்கின்றவரே
என் உள்ளம் உந்தன் பால் பொங்கிப்பொங்கி வழிகின்றதே.
நினைவெல்லாம் ஆண்டவர் நீர் மாத்திரம் தானே.
உம்மை வாழ்த்துகிறேன். என்னை வழிநடத்துவதற்காக நன்றி
என்னை தினம் தினம் பரிசுத்தப்படுத்தி வருவதற்காக நன்றி
என்றென்றும் நன்றி சொல்லியே உம்மை உயர்த்துவேன்.
என்னை ஆளும். ஆவியின் கனிகளால் என்னை நிரப்பும்.
அபிஷேகம் செய்யும். ஆராதனை உமக்கே நான் படைப்பேன்.
என்னை உமக்காக ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க பரிசுத்தமாக்கும்
இராஜனே நீர் வாழ்க. எல்லாமே உமக்குள் அடங்கியிருக்கிறதே. ஆமென்

14.07.09

என் சுகமும் பெலனும் ஆற்றல் வாழ்வையும் தருபவர் நீரே
என் நம்பிக்கைக்கு உரியவரே நம்பிவந்தேன் உம் சமூகம்.
எந்நாளும் நம்பியுள்ளேன் உம் வருகையை எதிர்பார்க்கின்றேன்.
உமது பிரசன்னத்தையே என்னுள்ளம் ஏங்கித்தவிக்கின்றது.
ஒவ்வொரு நிமிடமும் உம்முடைய தீண்டுதல்களை விரும்புகிறது.
ஆண்டவராம் உம்மிலே நான் ஒரு இளைப்பை அடைவேன்.
கலக்கம் எனக்கில்லை. கவலைகள் இனி இல்லவே இல்லை.
ஜோதி ஜீவராம் உமக்குள்ளே நான் நன்மைகளை பெற்றிடுவேன்
உலகத்தில் உம்மையன்றி எனக்கு யாருண்டு? துணை நீரே
என் இராஜா இயேசுவே உம்மை வாழ்த்திப் போற்றிடுவேன்.
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே நீர் வாழ்க உம் நாமம் வாழ்க.
எல்லையில்லா கிருபைகளால் என்னை நிரப்பி மகிழ்பவரே.
நாள்தோறும் என்னை நீர் வழிநடத்தி பாதுகாக்கின்றீர்.
நீரின்றி என் ஆசை எதுவும் நிறைவேறுவதில்லை.
உங்க அன்பொன்றே நான் விரும்பும் பிரதானம்.
ஆண்டவரே அதிசயமானவரே என் தூயவரே நீர் வாழ்க.
என் வழியும் என் நினைவும் உமக்கு முன்பே இருக்கின்றன.
நான் பாவி, மண்ணிலிருந்து வந்தேன். மண்ணுக்கே திரும்புகிறேன்.
நன்றி ஐயா நீர் என்னை இரட்சித்ததற்காக கோடானு கோடி நன்றி.
வாழ்க நீர் வாழ்க உம்மை மாத்திரமே நான் பிடித்துக் கொண்டேன்.
ஆராதனை. என்றுமே உமக்கே அல்லேலூயா பாடுவேன்.
சத்தியமானவரே, சர்வலோகாதிபதியே நான் உதவாதவன்.
என் மாம்சம் எனக்கு பாரமானதாக உள்ளதே.
என் ஆவி என்னைவிட்டு பிரிந்து போனால் நலமாய் இருக்குமே
என்னை உம்மிடத்தில் ஒப்புத்தந்தேன் வாழ்த்துகிறேன்.
அதிசயங்கள் செய்பவரே அன்பே உருவான ஆத்தும நேசரே
என் காலங்கள் யாவும் உமக்கு முன்னே நான் அறிபவன்.
உம்முடைய மகிமையை நினைக்கக்கூட தகுதியற்றவன்.
நான் தகுதியற்றவன். தீமைகளையே நினைப்பவன்.
இறைவா, நன்மைகளை நினைக்க எனக்கு உதவி செய்யும்
ஆராதனை ஆராதனை ஆராதனைக்குரியவரே!
முழங்கால் படியிட்டு உம்மை ஆராதிக்கின்றேன்.
இன்று எனக்கு நீர் தரிசனமாவீர் என்ற நம்பிக்கையுடன்
நான் காத்திருப்பேன். இயேசுவே உமக்காக காத்திருப்பேன்.
இறைவா என்னை ஏற்றுக்கொள்ளும் எடுத்துக்கொள்ளும்
ஆமென். ஆமென். வாழ்க வாழ்க என் தேவனே.

16.07.09

உம்மையல்லாமல் எனக்கு வேறு யாருண்டு? என் இயேசுவே!
உம் நாமம் என்றென்றும் மகிமைப்படுத்தப்படுவதாக!
என் ஆசை என் ஸ்நேகம் என் உறவு உம்மிடம் தானே!
உம்மை காணும் நாட்களை ஆவலோடே எதிர்பார்க்கிறேன்.
தேவரே. துதியில் மகிழ்வோரே நீர் வாழ்க வாழ்கவென்பேன்.
என் வாழ்வும் நோக்கம் உம்மிடம் அடைவது தான் ஐயா
நான் உம்மில் எந்நாளும் உயிருள்ளவனாக இருக்க வேண்டுகிறேன்.
என்மேல் தயவு பாராட்டும். என்மேல் இரக்கம் பாராட்டும்
என் பாவங்களையும், மீறுதல்களையும் எண்ணாதிரும்.
இராசாவே உம்மில் நான் உட்புகுந்தேன். ஜீவனைப் பெற்றேன்.
பாவத்தின் தலைவனை உம் நாமத்தினால் நான் ஜெயித்தேன்.
கல்வாரி நாதனே. கலங்கரை விளக்கே நீர் வாழ்கவென்பேன்.
துதியில் நான் மகிழ்வேன் உம்மை மாத்திரம் நேசிப்பேன்.
எனக்குள்ளே ஒன்றுமில்லை எனக்கே தெரியவில்லை நான் யார்?
புரியவில்லை எதற்காக பிறந்தேன் என்றும் தெரியவில்லை.
இன்னும் பிறவாமலிருக்கும் ஆத்துமாக்கள் நன்மையானவர்கள்.
இப்பூமியின் துன்பங்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர்.
அதிசயமானவர் அன்பே உருவானவர் அள்ள அள்ள குறைவில்லாதவர்
என் இன்பத்தில், துன்பத்தில் எல்லாவற்றிலும் நீர்தானைய்யா உள்ளீர்.
அன்பே உருவானவர் என்னைப் பெரிதாய்ப் பயன்படுத்த போகிறார்.
நான் உமக்கு பிரியமானவனாகவே இருக்க விரும்புகிறேன்.
எனக்குள்ளே நீர் பெரியவர். எல்லாவற்றிலும் நீரே பெரியவர்.
வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லவராம் நீரே.
உம்முடைய வலப்பெரிய கரத்தில் நான் அமர்ந்திருக்கின்றேனே.
என்னை காப்பாற்றும். என்னை வழிநடத்தும். என்னை வாழ்த்தும்
உமக்கு பிரியமானதை செய்ய எனக்கு கிருபை தாரும்.
ஆண்டவரே என் [illegible] உருவான அன்பின் தெய்வமே
நீங்க போதும் எனக்குப் போதும் என்னை வழிநடத்தும்
புதிய கிருபைகளால் என்னை நடத்தும் நன்மைகளை செய்யும்
கர்த்தனை ஆராதனை என் ஆண்டவர் இயேசு நீரே நல்லவர்.
நான் உம்மிலே நிலைத்து நிற்க வேண்டும். என் தலைமுறை தோறும்
என் வழித்தோன்றல்களும் உம்மிலே ஆசீர்வாதமாக வேண்டும்
என் வித்து உம்முடைய மகிமைக்கென்றாக வேண்டும்.
என் இயேசு என் தேவா என் இரட்சகரே என் இயேசு நாதா
நீங்க போதும். உம் பாதையே எனக்குப் போதும்.
நீங்க உயரணும் உம் நாமம் எங்கும் மகிமையடையணும் [illegible]

20-07-09

எல்லா மகிமைக்கும் சொந்தக்காரரே எந்தன் ஜீவனுமானவரே
எல்லா பாவங்களை விட்டு நான் தூர விலக விரும்புகின்றேன்.
பாவம் என்னை தொடர்ந்துக்கொண்டே வருகின்றது.
அது என்னை நெருக்கி என்னை மேற்கொள்ள காத்திருக்கிறது.
பாவத்தை நான் மேற்கொள்ள வேண்டும், அதை ஜெயிக்க வேண்டும்
எல்லாவற்றையும் அதின் கறையைக்கூட என்னை விட்டு விலக்கும்.
இறைவா உம்மையே நான் என் மனம் விரும்பியிருக்க வேண்டும்.
இராஜனே என் தேவனே உம்மையே நான் நேசிக்க வேண்டும்.
தூயவரே உம்மை துதித்துப்பாடிக்கொண்டே இருக்க ஆசை.
அதுவே என் பாக்கியம். என் நாவை நீர் தொட்டு பரிசுத்தமாக்கும்.
ஆண்டவரே உமதன்பொன்றே எனக்கு போதுமானதாக வேண்டும்
உம்மிடத்தில் நான் என்னை ஒப்புக்கொடுத்தேன். தந்து விட்டேன்.
உடைத்துப்போட்டு என்னை பரிசுத்தப்படுத்திடும்.
நான் மண்ணும், மண்ணுக்கே திரும்பும் கீழானவன்.
இறைவா என் ஆத்துமாவை உம் கையில் தந்துவிட்டேன்.
எனக்கு நீங்க இல்லாமல் ஒன்றுமில்லை. நீங்கதான் எல்லாம்.
இயேசுவே நீங்க என்னில் வரணும். நான் பிரகாசிக்கணும்.
ஆண்டவரே என் அன்பே உருவான அழகான தேவனுமானவரே.
உம்மை நான் என் சுதந்திரமாக கொண்டிருக்கின்றேனே.
என் பாவங்களை மன்னியும். மீறுதல்களை எண்ணாதிரும்.
நான் மாம்சத்தில் இருக்கின்றேன். ஆவியில் வாழ விரும்புகிறேன்.
நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர் நீரொருவரே நீர் மாத்திரமே.
நேற்றும், இன்றும் என்றும் உமக்கு பிரியமானவனாக நான் இருக்கணும்.
இறைவா கிருபை தரணுமே. என் வாழ்வில் உம் கிருபை வளரணுமே.
இராஜாதி இராஜனே, என் தேவனே உம் நாமம் வாழ்க.
உங்களுடைய இருதயம் எனக்கு வேண்டும். எந்நாளும் வேண்டும்
என் வாழ்க்கையை உம்மிடத்தில் மீண்டும் ஒப்புக்கொடுக்கிறேன்.
நான் பொய் பேசாதிருக்க என் நாவை கட்டிப்போடும்.
உம்முடைய அக்கினியால் என்னை நீர் சூழ்ந்துக்கொள்ளும்
உம்முடைய உள்ளங்கைகளில் என்னை தாங்கிக்கொள்ளும்.
நான் உமது பிள்ளை. உம்மை மகிமைப்படுத்த பிறந்துள்ளவன்.
உமது நாமத்தை உலகெங்கிலும் பிரஸ்தாபப்படுத்த போகிறவன்.
எனக்காக ஒரு வாசலை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கின்றீர்
என் அன்பே என் அழகே நீங்க போதும் எனக்கு.
உங்க துதி என் வாயில் என்றும் பிரியாதிருப்பதாக.
நான் உமது பிள்ளை. என்னை தண்டியாதேயும், ஆமென்.

22-07-09

என் தேவனே என் இராஜனே உம்மிலே நான் நிலைக்கொண்டுள்ளேன்.
இன்னும் நான் உம்மருகில் நெருங்கி வர ஆசைப்படுகிறேன்.
இறைவா உம்மைப்பற்றி இன்னும் அறியணும், தெரிந்துக் கொள்ளணும்.
இயேசுவே என்னை படைத்தவரே என்னை இரட்சித்தவரே என் பரிகாரியே
இயேசுவே உம் அன்பு எனக்கும் வேண்டும். அதிகமாக வேண்டும்.
இயேசுவே உமது ஆவி எனக்கும் வேண்டும், இன்னும் அதிகம் வேண்டும்.
உம்மிலே நான் அதிகமாக மறியமாய் இருக்கின்றேன். உம்மை நேசிக்கின்றேன்
நீங்க மாத்திரம் எனக்குப் போதும், உங்க கிருபைதான் என்னை தாங்குகின்றது.
நீர் இல்லாவிட்டால் என் வாழ்க்கை எந்த பகுதியிலோ போயிருக்கும்
உங்க கரம் என்னை தாங்குகின்றது. உங்க உள்ளங்கையில் நான் உள்ளேன்
ஆண்டவரே உங்க அன்பினால் என்னை சூழ்ந்துக் கொண்டீர்.
என் பாவங்களை மன்னித்தீர். மீறுதல்களை எண்ணாதிருந்தீர்.
நான் உமக்கு மிகவும் பிரியமானவனாகவே வாழ்ந்திடுவேன்
உம்முடைய சொந்த மகனாக நான் பரிசுத்தமடைவேன்.
பரிசுத்த ஆவியானவரே என்னை பரிசுத்தப்படுத்தி பரிசுத்த பிள்ளையாக்கும்
உம்மிலே நான் என்னிலே நீரும் என்றும் நிலைத்திருக்க வேண்டும்.
என் ஆவியை பரிசுத்த மாக்கிடும். ஆத்மாவை சரி செய்யும்
நான் ஒன்றும் பெரியவனல்ல. பரிசுத்தனல்லவே, தூயவனல்லவே
பொய் பேசும், இச்சிக்கும், பாவம் செய்யும், கபட்டுள்ளம் கொண்டவன்
எனக்குள்ளே உண்மை இல்லை. எந்நாளும் அன்பில்லை.
இறைவா உமக்கேற்ற கனி தரும் மரமாக நானில்லை.
என்னை சரி செய்யும். சுவைத்தரும் கனியாக என்னை மாற்றும்
என்னை நான் வெறுக்கின்றேன். என்மேல் இரக்கம் பாராட்டும்
நான் போராடுகின்றேன் இந்த உடலோடு, உதவி செய்யும்.
என் ஆற்றலும், என் பெலனும் ஆனவரே என் பரிசுத்தரே
நீங்க போதும் எனக்கு வேறென்ன எனக்கு வேண்டும்.
உகந்த காணிக்கையாக என்னை நான் உமக்கு ஜீவ பலியாக்கினேன்.
இதோ என்னை எடுத்துக் கொள்ளும். எடுத்துப் பயன்படுத்தும்.
கற்புள்ள கன்னிகையாக நானுள்ளேன். திருமணம் செய்துக்கொள்ளும்
ஒருநாளில் நான் உம்மோடு விண்ணில் செல்வேன்.
பரலோக வாழ்க்கையை அனுபவிக்க காத்திருக்கின்றேன்
இறைவா எனக்கு பாதை காட்டும், ஜீவனை தந்திடும்.
நீங்க மாத்திரம் எனக்குப் போதும். நீங்க இல்லா வாழ்வு ஒரு வாழ்வல்ல
என்னை புதிதாக்கும், புதிய பொருளாய் புதுப்படைப்பாய் மாற்றும்
இந்த உடலை உடைத்துப்போடும், ஆவியை உருப்படுத்தும்.
நான் உம்மிலே சேர என்னை பரிசுத்தமாக்கிடும். ஆமென்.

23.07.09

எனக்கு ஆத்தும பெலத்தை தந்தருளும். நான் சோர்ந்து போயிருக்கிறேன்.
என் ஆவி பெலனில்லாமல் கிடக்கிறது. நானோ மரித்தவன் போலிருக்கிறேன்.
நான் உடைந்திருக்கிறேன். பெலவீனப்பட்டு கிடக்கிறேன்.
ஆவியிலே மிகவும் பெலவீனனாய் இருக்கிறேன். பொல்லாங்கன் எய்கின்றான்.
என்னை தொடர்ந்து வந்துக்கொண்டே இருக்கின்றான், நானோ ஓடுகிறேன்
பகைஞன் என்னை மேற்கொள்ள வகை பார்க்கின்றான்.
நானோ சர்வவல்லவரின் நிழலில் தங்குவேன். எனக்கு அவரே அடைக்கலம்
நான் தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்திருப்பேனாகிலும்
அவர் என்னை வெறுப்பதில்லை. என்னை அவருக்கு பிரியமானவனாக ஆக்கினார்
ஆண்டவரே என் ஆயுசுமானவரே, நீரே ஆத்துமாவை நல்கினீரே.
உம்மை நான் ஆசீர்வதிக்கிறேன். நீரே ஆசீர்வதிக்கப்பட தக்கவர்.
உம் நாமம் மகிமை யடையணும். இறைவா நீர் போற்றப்படணும்.
உம்முடைய வல்லமையான கரத்தில் நான் காத்திருக்கின்றேன்.
என்னை ஏற்ற நேரத்தில் பண்படுத்தி பயன்படுத்த போகிறீர்.
நன்றி சொல்லி, என் கண்ணீரால் உம்மை நமஸ்கரிப்பேன்.
நீரென் தஞ்சம், நீரே என் அடைக்கலம். உம்மாலே எல்லாம் கூடும்.
அன்பே என் அடைக்கலமே என் ஆறுதலே நீர் வாழ்க.
உம் இராஜ்ஜியம் எனக்குள்ளே கட்டப்படுவதாக.
இரம்மியமாய் வாழ என் தேவனே எனக்கிரங்கும்.
நீரொருவரே எந்நாளும் போற்றப்படத்தக்கவர்.
ஆண்டவரே என் அப்பா, நான் உமக்கு பிரியமானவனா?!
என்னை ஏற்றுக்கொள்ளும். என் குற்றங்களை நினையாதிரும்.
என் சிறு வயது தவறுகளை என் உலக தந்தை எண்ணவில்லை.
என் பரம தகப்பனே என் பாவங்களை நீர் நினைவில் கொள்ளாதேயும்
எல்லா நேரத்திலும் நான் உமக்குள் ஓடி அடைக்கலமாவேன்.
என் உள்ளான மனுஷனில் புதிய பெலனை கட்டளையிடும்.
என் ஆவி எப்பொழுதும் உம்மிலே நேசித்து களிகூரட்டும்.
என் ஆத்துமா உம்மை எண்ணியே ஜீவித்திருக்கட்டும்.
என் மாம்சம் எனக்கு அடங்கி என்னை மேற்கொள்ளாதிருக்கட்டும்
ஆதியும், அந்தமும் ஆனவரே அதிசயங்கள் செய்பவரே
நீங்க போதும் எனக்கு உங்க அன்பே போதும் எனக்கு
எல்லாவற்றிலும் உம்மை நான் நேசிக்கிறேன். நன்றி.
இறைவா உம்மையன்றி எனக்கு வேறொன்றும் துணையில்லை.
எனக்குள்ளே எப்பொழுதும் நீர் வந்து தங்கியிரும்.
நான் உமக்கு எப்பொழுதுமே விருந்தை ஆயத்தம் செய்திருப்பேன்
அன்பே என் அதிசயமே உமக்கு ஸ்தோத்திரம். ஆமென்.

25-07-09

அன்பே என் அதிசயமே என் வழியே என் வெளிச்சமே
எனக்கே சொந்தமான என் தேவனும் என் பெலனுமானவரே!
எனக்குரிய பங்கும் எனக்கே முழுமையான தெய்வமானவரே
எனக்கே அதிக தொகையுமானவரே எனக்கே சத்தியமானவரே!
எனக்கே உரிய ஜீவத்தண்ணீரே, எனக்கே உரிய ஜீவ நதியே!
என்னுடைய சகலகலா வல்லமையையும், மகிமையையும் உடையவரே!
என்னுடைய சொந்தமானவரே, என்னுடைய ஆண்டவரே
உம்மை நான் நேசிக்கின்றேன். உம்மையே விரும்புகிறேன்.
ஆராதனைக்குரியவரே என் அதிசயம், அழகானவரே
எல்லா தூதர்களோடும், தாளத்தோடும், நடனத்தோடும் உம்மை
ஆராதித்து அன்பு கூருகிறேன். அல்லேலூயா துதி பாடுவேன்.
இணையற்றவரே, என் கண்களுக்கு மறைவானவரே
என் துணையாளரே, துன்பத்தில் என்னைத் தாங்கும் மணவாளரே!
என் கடவுளே, வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவரே
என் வாதைகளை என்னை விட்டு விலக்கினவரே
என் தேவாதி தேவனே என் இராஜாதி இராஜனே
என்னை தொடும். வல்லமையாக தொடும். தொட்டு சுகமாக்கும்
நான் உம்மை நேசிக்கிறேன். பாவத்தை வெறுக்கின்றேன்.
பரிசுத்தத்தை விரும்புகிறேன், பரலோகத்தை வாஞ்சிக்கின்றேன்.
என் பரிசுத்த ஆவியானவரே உம்மை ஏங்குகின்றேன்.
இராஜனே என்னை படைத்த என் பரம்பொருளே!!
என்னை விரும்பும் என் தேவனே, என் நாயகனே
நீர் வாழ்க. நீங்க போதும் தகப்பனே! வேறு என்ன பெரியது?
எல்லாவற்றையும் விட உம்மையே நான் அதிகம் தேடுகின்றேன்
என்மேல், என் மரணத்தின் மேலுள்ள சாபத்தை போக்கிடும் தேவா?!
என் ஆத்துமாவை உம் கரத்தில் ஒப்புக் கொடுக்கின்றேன்.
என் ஆவியை ஆவியை பரிசுத்தமாக்கிடும், பரவசமாக்கிடும்.
என் ஆவியானவரே என்னோடு பேசிடும். பேசிவிடும்.
என் பெலவீனத்தை மாற்றி புதுப்பெலனால் நிரப்பிடும்
ஆண்டவரே என் ஜோதி ஜெயவரே நீர் வாழ்க வாழ்கவென்பேன்.
என்னுள்ளம் உந்தன்பால் பொங்கிப்பொங்கி வழியுதே!
நீங்க மாத்திரம் எனக்கு போதும் உம் அன்பே போதும்.
ஆதியிலும் இருந்தவரே, என்னையும் அறிந்திருந்தீரே
நான், என் மனைவி, என் பிள்ளைகள், என் பெற்றோர்
என் உறவுகள், என் வீட்டார், என் குடும்பத்தார், என் சபைகள்
யாவரும் உம்மையே நேசிக்கின்றனர். நீர் வாழ்க வாழ்கவென்பேன்.

26-07-09

மனதுருகும் தேவா என்னை பரிசுத்தப்படுத்தி உமக்காக பயன்படுத்தும்
என் இருதயத்தில் தைரியத்தை வையும். உம்முடைய அன்பை செதுக்கிடும்.
இராஜாதி இராஜனே என் தூயவரே என்னுடைய எல்லாமுமானவரே
எல்லா வல்லமையையும் உடையவரே அதிகளின் நாயகனே
உம்மையல்லாமல் உம்மையல்லாமல் எனக்கு வேறு யார் யாருண்டு?
என்னுடைய மிக மிக சொந்தமானவரே, நான் உம்மை நேசிக்கிறேன்.
இருளிலிருந்து என்னை தூக்கியெடுத்தவரே உமக்கு நன்றி!!
என்னைத் தொடர்ந்து இருள் வருகிறதே! இறைவா தடுத்துவிடும்.
தனிமை விரும்புகிறேன். உலகத்தை வெறுக்கின்றேன். உம்மை நேசிக்கிறேன்.
என் இராஜனே என் தேவனே உம்மை ஆராதிக்கின்றேன்.
உம்மோடு இருப்பது தான் என் வாழ்க்கை, அதை மாத்திரம் விரும்புகிறேன்.
உம்மிடத்திலே எனக்கு எப்பொழுதும் ஒரு இடமுண்டு. யாரும் அதை
உம்மிடத்தில் இருந்து பறித்துக்கொள்ள முடியாது முடியவே முடியாது.
இறைவா உம்மை நான் நேசிக்கிறேன். உம்மை நான் விரும்புகிறேன்.
தேவனே என் இராஜாவே என்னை ஆளும் பரம்பொருளே!
பரிகாரியே, என் ஆதியும் அந்தமும் அல்பா ஒமேகாவானவரே!
நீங்க என்னோடு இரும். என்னை விட்டு போய்விடாதிரும்.
நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை. கைவிடுவதுமில்லை என்றீரே!
இதோ உம்மிடத்தில் என்னை ஒப்புக்கொடுத்தேன். தந்துவிட்டேன்.
தாமதியாதேயும். உமக்காக இரவு முழுவதும் காத்திருந்தேனே!!
இனிமேலும் காத்திருக்க வையாதேயும். என்னை அபிஷேகியும்.
உம்முடைய ஆனந்த தைலத்தால் என்னை அபிஷேகியும்.
எல்லையில்லாத உம்முடைய இரக்கத்தினால் என்னை மூடிக்கொள்ளும்.
நான் உம்முடைய சமூகத்தில் காத்திருக்கின்றேன். தினமும் தவித்திருக்கிறேன்
உம்மையே யோசித்துக்கொண்டிருக்கிறேன். உம்மையே என்னில் கொண்டேன்.
உம்மைத்தானே என் முன்னே தினமும் நிறுத்தியிருக்கின்றேன்.
நீங்க மாத்திரம் எனக்கு ஆதாரம். நீங்க போதும் எனக்கு!
நீங்க இல்லாத வாழ்வு எனக்கு ஒரு வாழ்வாக வேண்டாம்.
எனது வாழ்வே உம்மோடு வாழ்ந்திட வாஞ்சித்துக் கொண்டிருக்கின்றது.
எனது ஆத்துமா உம் பிரசன்னத்தை ஏங்கி விரும்பி தவிக்கின்றது.
தாகமாக இருக்கின்றேன். தண்ணீர் வேண்டுமே. பசித்திருக்கின்றேன்.
ஏக்கமாக இருக்கிறேன். ஏங்கி உருகின்றேன். ஏமாற்றமடைந்திருக்கிறேன்.
எத்தனை இரவு காத்திருக்கிறேன்? எங்கே நான் போவேன்?!
எந்த நாளில் நிறைவேறும்?! இயேசுவே எனக்கு சொல்லிடும்
நான் நிம்மதி அடைகின்றேன். வெளிச்சம் வருகின்றேன்.
வாழ்கின்றேன். உம்மோடு வசிக்கின்றேன். அல்லேலூயா. ஆமென்.

28.07.09

என்னுடைய தேவன் சர்வ வல்லமையையும் உடைய தேவன்
அவரே எல்லாரிலும் பெரியவரும், நல்லவரும், மகிமையுமானவர்
அவருக்கே துதியும், கனமும், ஸ்தோத்திரங்களும் அவரைச் சார்ந்தது
எல்லாரிலும் பெரியவராம் என் இயேசு கிறிஸ்துவானவர் உண்மையுள்ளவர்
என் பாவங்களை சுமந்து தீர்க்க இப்பூமியில் அவதரித்தார்.
அவ்வண்ணமே அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார்.
எனக்காக மரித்தார். மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்
நானும் பரிசுத்தத்திற்காக அவருக்குள் உயிர்த்தெழுந்தேன்.
என் தேவன் எனக்குள் வாழ்கிறார். என்னை விரும்புகிறார்.
நான் அவரை நேசிப்பதைக் காட்டிலும் என்மேல் அவர் அதிகம் நேசிக்கிறார்
என்னை நான் அவருக்குள் ஒப்புத்தந்தேன். வாழ்க வாழ்க வென்பேன்
அன்பே என் ஆண்டவரே அதிசயங்கள் செய்பவரே
உம்மை நான் ஆராதித்து ஆர்ப்பரித்து போற்றிப் பாடுகின்றேன்.
இறைவா, ஆட்டுக்குட்டியானவரே என் மகிமையின் தேவன்.
அல்லேலூயா சொல்லி ஆர்ப்பரித்து பாடி மகிழ்ந்திடுவேன்.
தூயாதி தூயவரோடு நானும் சேர்ந்து அவரைப்போல தூய்மையாவேன்.
கருணையுள்ளவரே, என் கிருபாநிதியே நீர் வாழ்க வாழ்க.
உம் நினைவாக நான் இருக்கின்றேன். என்னை விட்டுவிடாதிரும்.
எடுத்துக்கொள்ளப்படும் நாளில் என்னையும், என் வீட்டாரையும்
நினைத்துக்கொள்ளும். என் தேகமும் உமக்கு சொந்தமாகட்டும்.
இதோ எனக்கென்று உருவாக்கப்பட்டு வைத்துள்ள இடத்தை விரும்புகிறேன்
இயேசுவே நீர் வரும் போது நானும் உம்மோடு வந்திடுவேன்.
பரலோகம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. அதை விரும்புகிறேன்.
ஏனெனில் சர்வ வல்லவரின் உலகம் அது. அவர் வாசம் செய்யும் இடம் அது.
சேனைகளின் கர்த்தர் குடியிருக்கும் வாசஸ்தலமது!!
என் ஆண்டவரே நீங்க எந்நாளும் போற்றப்படணும்.
உம்முடைய நாமத்தை நான் பரிசுத்தப்படுத்தணும்.
நீர் எனக்குத் தந்த கட்டளைகளை கைக்கொள்ள வேண்டும்.
என்னிடத்தில் குறையிருப்பின் அதை எண்ணாதிரும்.
என் குற்றங்களை பாராதேயும். என் பாவங்களை மன்னியும்
உமக்கு முன்பாக உண்மையும், உத்தமனுமாக இருக்க ஆசைப்படுகிறேன்
உமக்கு பிரியமானவனாக இருக்க வேண்டுகிறேன்.
அதுவே என் வாஞ்சையாக இருக்கும். இனிமேலும் தொடரும்.
என் ஆயரே என் விண்ணப்பங்களை எண்ணிப்பாரும்.
நான் எந்நாளும் உமக்கு சொந்தமானவன். இவ்வுலகத்திற்குரியவனல்ல.
என்னை எடுத்துக் கொள்ளும். சீக்கிரமாக வாரும். அல்லேலூயா!

29-07-2009

என் உயிரான என் உயிருக்கும் மேலாக நான் நேசிக்கும் இயேசுவே!!
நீர் என்னை பார்த்துக்கொண்டிருப்பதை நான் அறிந்திருக்கின்றேன்.
என்னை மிகவும் நேசிக்கின்ற என் ஆண்டவரை நான் அறிந்திருக்கின்றேன்.
அன்பினால் நேசம் கொண்டு எங்களுக்காக மரித்த உம்மை நான் அறிவேன்
நீங்க இல்லாவிட்டால் பரலோகத்திலே எனக்கு ஆதாரம் ஏது?!
நீங்க இல்லாவிட்டால் பிதாவை நானும், நாங்களும் கண்டிருக்க முடியாது!!
என் மனக் கண்கள் இன்னும் திறக்கப்படட்டும். ஒளி பெறட்டும்.
உம்மை தரிசிக்க நான் ஆவலோடே காத்திருக்கின்றேன்.
மகிமையின் தேவா, மாசற்ற இராஜா உம் பாதம் நான் பணிகின்றேன்
உங்களை போற்றிப்பாடி பாடி மகிழ்ந்து மகிழ்ந்து துதிப்பேன்.
முழு உள்ளத்தினால் உம்மை அன்பு கூர்ந்து ஆராதிப்பேன்.
என் பாரங்கள், கஷ்டங்கள், கவலைகளை உம்மிடம் தந்துவிட்டேன்.
என் வாழ்வை உம்மிடத்தில் தந்துவிட்டேன். இனி அது உம்மை சார்ந்தது.
எனக்கு சொந்தமென ஒன்று உண்டு. அது நீரே, என் இயேசுவே!!
பாவ எண்ணங்களை சத்துரு விதைக்கப்பார்க்கின்றான்!
நான் பாவி. எனவே என் மாம்சம் அதை ஏற்றுக்கொள்கிறது!
இறைவா, என் மாம்சத்தின் சாபத்தை அதை விட்டு நீக்கிப்போடும்.
அதனுடைய ஆலோசனைக்கு நான் உட்படாதிருக்கச் செய்யும்.
அதின் இச்சைகளை நான் அருவருக்கின்றேன். விரும்புவதில்லை
ஆண்டவரே என்னை அதிகமாய் நேசிக்கின்ற என் தகப்பனே
உம்மை நான் ஒவ்வொரு நாளும் தேடி அலைகின்றேன்.
எனக்குள்ளேயே நீர் இருக்கின்றீர். எனக்கு நீர் வழிகாட்டுகின்றீர்.
உம்முடைய சிறைப்பாதுகாப்புக்குள் என்னை பிரவேசிக்கச் செய்கின்றீர்.
உம்முடைய நீதியின்படி என்னை நாள்தோறும் நடத்திச்செல்கின்றீர்.
ஆராதனை, ஆராதனை எல்லா நிமிடமும் உம்மையே நினைக்கின்றேன்.
உம்மை தரிசிக்க விரும்புகின்றேன். ஆனாலும் என் சித்தத்தின் படியல்ல.
பிதாவின் சித்தத்தின் படியே நடக்க ஆசைப்படுகின்றேன்.
இயேசுவே என் மகா இராஜாவே, இந்த மனிதனை சந்தோஷப்படும்.
என்னை நான் மீண்டும் தூய்மையாக ஒப்புக்கொடுக்கின்றேன்.
என் தேவனே, நான் உம்முடைய கரத்தில் காத்திருக்கின்றேன்.
என்னை திடப்படுத்தும். பெலத்தை தந்து பெலப்படுத்தி வழிப்படுத்தும்.
நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்.
இறைவா, இன்னும் உம் கிட்ட நெருங்கி சேரணும். உதவி செய்யும்.
நல்லவரே, நன்மைகளின் நாயகனே உமக்கே ஆராதனை.
உண்மையாகவே உம்மை நான் அன்பு கூறுகின்றேன்.
நீரே எல்லாவற்றையும் அறிந்திருக்கின்றீர். ஆமென்.

01-08-09

உம்முடைய கரத்தினில் நான் காத்திருக்கின்றேன் உமது சித்தத்தின் படியே!
உம்முடைய விருப்பத்தின் படியே என்னை வனைந்திடும் குயவனே!
இந்த பாத்திரம் உமக்கு எந்த விதத்திலாவது பயனாயிருப்பின் நலமே!
இறைவா, இந்த பாத்திரம் உமக்காக காத்திருக்கின்றது என்பது உண்மையே
உமது வசனத்தின் படியே நீர் எனக்கு அதை அளவில்லாமல் தரப்போகிறீர்
ஆனால் அதைப் பெற்றுக்கொள்ள என்னை ஆயத்தப்படுத்தியும் வருகின்றீர்.
கடந்த காலங்களை நான் நினைத்துப் பார்க்கின்றேன். எல்லாம் மாயை.
இதோ எதிர்காலத்தையும் நினைத்து பயப்படுகிறேன். அதுவும் மாயையே.
இறைவா, இந்த நிகழ்காலமே உண்மை. நீர் என்னோடு இருப்பதும் உண்மை
என்னோடு பேசுபவரும் நீரே. உமது வாக்குத்தத்தங்களை நினைக்கிறேன்
என் செவியை நீர் திறந்திடும். என் இருட்டுத்தனத்தை என்னைவிட்டு நீக்கிடும்
இறைவா, இருள் சூழ்ந்திருக்கும் பகுதியில் என்னை விடாதேயும்.
நான் உம்மோடு இருக்கவே பிரியப்படுகின்றேன். அதுவே என் வாஞ்சை.
உம்முடைய பரிசுத்தம் எனக்கும் வேண்டும். என் வாழ்வை மாற்றிடும்.
புது வாழ்வைத் தந்து எல்லாவற்றையும் என்னில் புதிதாக்கிடும்.
அன்பே என் நேசரானவரே நீர் வாழ்ந்த வாழ்வை வாழ்வேன்.
உம்மை நான் மறவேன். என்னுள்ளம் உம் பெயரைச் சொல்லி மகிழ்கின்றது.
உம்முடைய காருண்யம் என்றும் கிருபையால் என்னை சூழ்ந்துகொள்ளும்
நீங்க போதும்! என் வாழ்வினில் நீரே எனக்கு எல்லாமுமானவர்.
இராஜாதி இராஜா, தேவாதி தேவா உம் சித்தம் நிறைவேறுவதாக.
இதோ இப்பூவுலகம் உம்முடைய மகிமையை காண்கின்றதே!
அன்பிலும், ஆசீர்வாதத்திலும் ஐசுவரியம் நிறைந்தவர் நீரே!
கல்வாரியின் அன்பை நான் என் மனத்தினில் நிறுத்தியுள்ளேன்.
அதை நித்தமும் தியானித்து உமது அன்பை வணங்கிக்கொள்கிறேன்.
எல்லையில்லாத கிருபையினால் என்னை நீர் மூடிக்கொள்ளும்.
நான் உம்முடைய பாதத்தில் அமர்ந்து உம்மை வேண்டிக்கொள்வேன்
அப்பொழுது என் வேண்டுதல்களை நீர் கேட்டு பதில் தருவீர்.
நானும், என் வீட்டாரும், என் தேசமும், என் ஜனமும் இரட்சிக்கப்படுவோம்.
இறைவா உமக்கே நன்றி சொல்லிச் சொல்லி நான் உம்மை துதிக்கிறேன்.
அன்பே என் இரட்சகரே, உம் வசனம் எனக்கு பேரானந்தம்.
உம்முடைய கற்பனைகள் எனக்கு பாதை. அதுவே சிறந்த பாதை.
உம்முடைய நீதி எல்லாவற்றின் நீதியிலும் மிகவும் சிறந்தது.
உம்முடைய ஞானம் எல்லாரின் ஞானத்திலும் மிக மிக பெரியது.
ஆகவே, உம்முடைய ஆத்தும நண்பன் நானாக வேண்டுகிறேன்.
உமக்கு பிரியமானவனாகவே இருக்க விரும்புகிறேன்.
என் இராஜனே உமக்கே எல்லா துதியும், கனமும், மகிமையும். ஆமென்.

02-08-09

என்மேல் அளவில்லாமல் கிருபையை பொழிந்தருளினதற்காக ஸ்தோத்திரம்.
மெய்யாகவே என்மேல் அன்பை அதிகமாக வைத்திருப்பதற்காக நன்றி.
இயேசுவே இன்னும் நான் உம்மை நெருங்கி வரவேண்டும்.
என்னிலுள்ள குறைகளை நான் அறிக்கையிடுகின்றேன்.
இறைவா என் பாவங்களை நான் அறிக்கையிடுகின்றேன்.
என் சாபங்களை உடைத்தெறியப்பட்டு வெளிவர ஆசைப்படுகின்றேன்.
என் குறைகளை நீர் நீக்கி உம்முடைய கனியால் நிரப்பிடும்.
நான் உம்முடைய பிள்ளையாக ஆக என்னை முழுவதுமாக பரிசுத்தமாக்கிடும்
நான் இன்னும் பரிசுத்தமாகணும். உம்மால் இன்னும் பரிசுத்தமாக்கப்படணும்.
ஆண்டவரே என்மேல் இரக்கமாயிரும். என் பாவங்களை நீர் எண்ணாதிரும்.
என் பாவங்கள் மிகுதியாக எண்ணமுடியாத அளவில் இருக்கின்றனவே!!
என் இராஜாவே, என் தேவனே என்னை மிகவும் நேசிப்பவரே!!
என் தாய், தந்தையைக் காட்டிலும் என்மேல் அதிகம் கரிசனையோடு இருப்பவரே!
உம்மை நான் பாடி போற்றுகின்றேன். உம்மையே வாழ்த்தி ஆராதிக்கின்றேன்.
அதிசயங்கள் அதிகம் செய்பவரே, என் அழகே என் அன்பே தேவனவரே
நீங்க போதும் எனக்கு, உங்க உதவியே போதுமெனக்கு!
இறைவா எனக்கு தைரியத்தை கட்டளையிடும். நான் உம் பிள்ளை!!
என் இராஜாதி இராஜாவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவன்!!
ஓ பாவமே, நீ எங்கே!? உன் தேசம் எங்கே!? உன் வழி எது?!
என்னில் உனக்கு இடம் கிடையாது! நீ வந்த வழியே திரும்பு!
நான் உங்களுக்குள் வாசம் செய்யவும், என்னில் நீ வாசம் செய்யவும்
விரும்புவதில்லை. விரும்பவே விரும்புவதில்லை. நீ போய் விடு!!
என் தேவனையும், என்னையும் பிரிக்கின்ற சதிகாரனே நீ போய் விடு!!
எல்லா ஜனங்களையும் வழி கெட்டு போகச் செய்கின்ற பிசாசே நீ யார்?!
நான் இயேசுவிற்கு சொந்தம். எழுத்திலே நான் முத்திரையிடுகின்றேன்!
என் எழுத்தினால் இயேசுவின் நாமத்தினால் முத்திரை செய்கின்றேன்.
இனி என் வாழ்வில் உனக்கு பங்கு கிடையாது!!. உனக்கு ஒன்றுமில்லையடி
போ, தொலைந்து போ!! என் இயேசு என்னோடு என்றும் இருக்கிறார்.
பரிசுத்த ஆவியானவர் என்னுள்ளில் இருக்கிறார். எனக்குள்ளே வாசம் செய்கிறார்.
நான் அவரை நேசிக்கின்றேன். அவர் பெரியவர். அவர் சர்வ வல்லவர்!
அவரே என்றாளும் பெரியவர்! எனக்கு சொந்தமானவர்! அவரை விரும்புகிறேன்.
அவருக்காக தினமும் நான் கண்விழித்து காத்துக்கொண்டிருக்கின்றேன்.
அவர் என்னை தாங்குகிறார். என்னை என்றாளும் வழிநடத்துகின்றார்.
அவரில் நான் அன்பு கூறுகின்றேன். அவரில் நான் சந்தோஷப்படுகின்றேன்
அவருடைய வல்லமையை நினைத்து நினைத்து ஆனந்த களிகூறுகிறேன்.
என் இயேசுவே உம்மை நான் அதிகமாக விரும்புகிறேன். ஆமென்.

03-08-09

உந்தன் நாமத்தை சொல்லுகையிலே என்னுள்ளம் துள்ளுகின்றது.
ஏனென்றால், நான் மெய்யானவரை ஆராதித்துக் கொண்டிருக்கிறேன்.
அவரில் நான் மிகவும் அன்பு கூறுகிறேன். அவரையே நேசிக்கின்றேன்.
அவர் என் இயேசு இல்லாவிட்டால் நான் அவரை அறிந்திருக்க மாட்டேன்.
அவரே எனக்கு வழியும், சத்தியம், ஜீவனுமானவர் என்று பறை சாற்றுவேன்.
நல்லவரே, நன்மைகளின் நாயகனே நீர் வாழ்க வாழ்கவென்பேன்.
நீங்க வாழ்க. உங்க நாமம் என்றென்றும் மகிமைப்படுத்தப்படுவதாக.
உங்க ஊழியம் உலகமெங்கிலும், இராஜ்யம் இறங்கி வர வேண்டும்.
என்னில் இன்னும் ஒரு பெரிய எழுப்புதல் உண்டாக வேண்டும்.
இறைவா, இயேசுவே உம்மை நான் சிந்தித்து போற்றி மகிழ்வேன்.
உம்மை துதித்துப்பாடி ஆராதித்து நன்றி பலிகளை ஏறெடுப்பேன்.
ஆராதனைக்குரியவர் நீர் மாத்திரம் உங்களை நான் விரும்புகிறேன்.
சிலுவையை நான் சுமக்கவா?! என் இயேசு எனக்காய் சுமந்தாரே!!
என் சுமைகளை ஏற்கனவே அவரில் கொடுத்து விட்டேன்.
இனி நான் அல்ல என்னில் இயேசுவானவரே வாழ்கிறார்.
அன்பே என் ஆறுதலே, எனக்காக இவ்வுலகில் இறங்கி வந்தவரே!
என் மகா இராஜனே, என் ஜீவனும் பெலனும் ஆதாரமுமானவரே,
உம்மில் நான் நிலைத்து நிற்க வேண்டும். உம்மையே சிந்திக்க வேண்டும்.
ஐயவரே என் இதயில் பிரியமாக இருப்பவரே நீர் வாழ்க.
உம்முடைய வருகைக்காக காத்திருக்கின்றேன். நான் ஆயத்தமா?!
இறைவா என்னை பரிசுத்தப்படுத்தி உம்மைப் போல மாற்றுங்க.
என்மேல் கருணையுள்ளவரே என்னுள்ளத்தை அறிந்திருக்கிறவரே
உம்மைப்போல யாருண்டு என்னை நேசிப்பவர் நீர் மாத்திரம் தானே!
இறைவா என்னை நீர் விரும்புகிறீரோ?! நான் அறியேன் இறைவா!!
என்னை எந்நாளும் சரியான பாதையில் நடத்த பழக்குவிக்கின்றீர்
இராஜாதி இராஜனே, என் தேவாதி தேவனே உம்மை வாழ்த்துகின்றேன்
உம்மைத்தானே நான் நேசித்து ஆராதித்து தொழுதுக் கொள்கிறேன்.
இறைவா எனக்கு மிகவும் பிடித்தமானவர் நீர்தானே ஐயா!!!
உம்மை என் முழு உள்ளத்தால் ஸ்தோத்தரித்து புகழ்ந்து பாடுகின்றேன்.
என் தெய்வமே, என் மேல் மனதுருக்கம் கொண்டிருப்பவரே,
என்னை உமக்கு நாள்தோறும் ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கின்றேன்.
என் ஜோதி தூயவரே, இதயில் வாசம் செய்கிறவரே!
வானாதி வானங்களுக்கு மேலாக சிங்காசனத்தை கொண்டிருப்பவரே.
என் தலையை உமக்கு நேராக உயர்த்த நான் தகுதியானவனல்லன்
என்னை தகுதிப்படுத்தும், என்னை உமக்கு பிரியமானவனாக மாற்றிடும்
என்னை நான் ஒரு பொருட்டென்று எண்ணுவதில்லை. நீரே எல்லாம். ஆமென்.

04.08.09

என்னை சூழ்ந்து கொள்கிற உம்முடைய கிருபைக்காக ஸ்தோத்திரம்.
நீரே என் செல்வம், என் பரிகாரியும், என் முழு ஜீவனுமானவர்.
நான் பிறக்கும் போதும் அழுதுகொண்டே பிறந்தேன். ஆனால்
மரிக்கும் போது சந்தோஷத்தோடே மரித்து உம்மிலே உயிர்த்தெழுவேன்.
இறைவா, நான் மரிக்கும் நாளை ஆவலோடே நோக்கியிருக்கின்றேன்.
ஏனெனில் என்னுடைய சொந்த தேசத்திற்கு நான் செல்லும் நாள் அதுவே!
என் இராஜாவே என் தேவனே உம்மிலே நான் களிகூருகிறேன்.
ஆண்டவராகிய என் ஆத்தும நேசரே என் நீதியின் அரசரே,
உம்மிலே நான் எந்நாளும் மகிழ்ச்சியடைகிறேன் ஆமென்.
எல்லாம் வல்லவராம் என் இயேசு கிறிஸ்துவில் நான் சந்தோஷப்படுகிறேன்
கர்த்தரே என்மேல் கருணையோடு இருப்பவரே, நீர் வாழ்க.
நான் நிற்பதும், நிர்மூலமாகாமலிருப்பதும் உமது சுத்த கிருபை.
என்னிலே நீர் தங்கியிருப்பதும் உமது மிகப்பெரிய கிருபை.
நான் உபயோகமில்லாமல் இருப்பது என்னுடைய மிகப்பெரிய குறையே!
இறைவா என்னை எடுத்து பயன்படுத்தும், உபயோகப்படுத்திடும்.
என்னில் எல்லாம் அழுக்கு நிறைந்திருக்கிறது. நீர் தான் கழுவணும்.
என்னை பரிசுத்தப்படுத்தி உமக்கு பிரியமானவனாக மாற்றிடும்
நான் மிகமிக விரும்பிடும் ஒரே ஒரு காரியம் அதுவே!!
என்னிலே எல்லாம் வீணே! நான் இவ்வுலகத்திற்குரியவனல்லவே!
உமக்குரியவனே! எந்நாளும் உம்மை ஆராதித்துக்கொண்டிருக்க விரும்புகிறேன்
என் விண்ணின் அதிபதியே! என் ஜீவத்தண்ணீரே! ஜீவப்பானகை நீரே
உம்மை நான் வாழ்த்தி போற்றி பாடுகிறேன்! நானோ நேசிக்கிறேன்.
எனக்கு பாடத்தெரியாதே! உச்சரிக்கத் தெரியாதே! இயேசுவே
என் நாவை தொட்டு சுகமாக்கும், நான் உம்மை பாட வேண்டும்.
உம்மை போற்றிப்பாடி உலகத்தின் மத்தியிலே மகிமை படுத்த வேண்டும்
உலகம் என்னை ஒன்றும் செய்ய முடியாது. நீரே என்னை ஆள்பவர்.
உம்மை மாத்திரம் நான் விரும்பி, உமக்காக ஏங்குகின்றேன்.
ஆண்டவரே என்னை ஏற்றுக்கொள்ளும். என்னை எடுத்துக்கொள்ளும்.
நான் உம்மோடு இருக்கவே விரும்புகிறேன். அதையே இரசிக்கின்றேன்.
என் இயேசுவே உம்மையே நான் வேண்டி விரும்புகிறேன்.
என்னோடு வாசம் செய்கிறவரே நான் உம்மில் வாழ விரும்புகிறேன்.
என் விருப்பத்தையெல்லாம் அறிந்திருப்பவர் நீரே நீர் தானே ஐயா.
உம்மிலே எனக்கு எத்தனை அறிவு, ஞானம், புத்தி உண்டு.
உமக்குள்ளே எனக்கு மிகப்பெரிய ஆறுதலும், அடைக்கலமும் உண்டு.
ஆமென். நான் உமக்குள்ளே சுக சுகமாய் தங்கியிருப்பேன்
உம்மில் தானே எனக்கு அமைதி உண்டு. அல்லேலூயா. ஆமென்.

06-08-09

இயேசுவே என் இதய நாயகனே, என் கண்களை பரிசுத்தப்படுத்தும்.
இச்சைகளை நாட விரும்பும் என் கண்களை பரிசுத்தமாக்கிடும்.
என் இராஜனே என்மேல் மனதுருக்கம் கொண்டிருப்பவரே.
உம்மை நான் வாழ்த்தி போற்றிப் புகழ்ந்து துதித்துப்பாடுகின்றேன்.
நான் நிற்பதும், நிர்மூலமாகாமலிருப்பதும் உமது சுத்த கிருபை.
நான் வாழ்வதும். பரிசுத்தமுள்ளவனாக உமக்கு பிரியமானவனாக வாழவும்
இயேசுவே, என் தெய்வமே கருணையின் கடலே நீர் வாழ்க.
என் கண்களை உமது அக்கினியால் வேலியிட்டு காத்திடும்.
நான் உம்மை நேசிக்கிறேன். உம்மையே நோக்கி காத்திருக்கின்றேன்.
உம்மை காணப்போகும் என் கண்கள் பரிசுத்தமாக்கப்படவும்.
நான் உம்மை காணப்போகின்ற நாட்கள் நெருங்கி வருகின்றதே!
என் இயேசுவே என்னில் ஒளி பெருகட்டும், மறுமைக்கு பயன்படட்டும்.
என் கண்களின் இருளை அகற்றி ஒளியை தந்தாரும்.
என் கண்கள் உமக்குரியது. உம்மிடம் ஒப்புக்கொடுத்தேன்.
அசுத்தங்களை என் கண்கள் ஏன் விரும்புகின்றன?!
தெரியவில்லை. புரியவில்லை. ஒன்றும் விளங்கவில்லையே!!
என் உயிரிலும் மேலானவரே, என் எல்லாம் வல்லவரே!!
உம்மை நான் நேசிக்கின்ற காரணத்தால் எல்லாவற்றையும் வெறுக்கின்றேன்.
என்னையே உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தேன். நீரே என் எல்லாம் வல்லவர்.
உமக்கு முன்னே நான் உத்தமனாக நடக்க கிருபை செய்திடும்.
உம்மருகில் நான் ஒருபோதும் வரக்கூடாது. ஆனால் உம்மை விரும்புகிறேன்.
இறைவா சர்வ வல்லவராம் நீர் எல்லாவற்றையும் நடப்பிக்கிறவர்.
உம்மிடத்தில் எனக்கு ஆறுதல் என்றென்றும் உண்டு, நீதியும் உண்டு
உம்மிலே நான் மறைந்துக்கொள்வேன். பாதுகாப்போடு இருந்திடுவேன்.
எனக்கு பிரதானமானவர் நீர் மாத்திரம் தானே! நீரொருவரே!
நான் மிக மிக அதிகமாக நேசிப்பவர் நீர் மாத்திரம் தானே இயேசையா!
எல்லையில்லா ஆனந்த தைலத்தால் என்னை நிரப்புகின்றீர்.
நீங்க இன்பத்தை என் தலையின் மேல் வைத்தீர்.
நித்திய கிரீடத்தை என் சிரசின் மேல் வைத்தீர்.
என்னை உமது பிரியமானவனாக ஏற்றுக்கொண்டீர்.
உம்மிலே ஒரு குறையும் இல்லை. நானே எல்லாம் குறையுள்ளவனானேன்.
இறைவா உம்மோடு தான் நான் வாழ்வேன். நீரில்லாவிட்டால் நானில்லை.
நான் அறிந்துக்கொண்டேன். சத்தியத்தை புரிந்துக்கொண்டேன்.
இறைவா, உம் நினைவாகவே இருக்கின்றேன். உம்மிலே நான் களிகூருகிறேன்.
எத்தனை நாட்களாக உமக்காக காத்திருக்கின்றேன். நீர் வாழ்க என்கிறேன்.
உம் அருகில் நான் மகிழ்கின்றேன். என்றும் மன மகிழ்ச்சியோடு இருக்கிறேன்.

08-08-09

என் மகிமையின் அழகே, என்மேல் அசைவாடும் பரிசுத்தரே,
உம்மை இன்னார் என்று நான் அறிவேன். நன்றி அறிவேன்.
என்னை அளவில்லாமல் நேசிக்கின்ற என் அன்பு இராஜனே
எந்நாளும் உமக்கே என் துதியை ஏறெடுத்து அக மகிழ்வேன்.
தேவாதி தேவனே என் ஜோதி ஜெயவரே நீரே நீர் மாத்திரம் வாழ்க!!
உம்மை ஆராதிக்கின்றேன். உம்மிலே நான் அன்பு கூறுகின்றேன்.
உம்முடைய சர்வ வல்லமையான நிழலில் நான் நிற்கின்றேன்.
என் ஜெயவரே, என்னை விரும்பி என்னை இணமாக்கியவரே
உமக்குள்ளே நான் இளைப்பாறி உம்மிலே ஆறுதலடைவேன்!!
இறைவா என்னை நான் உம்மிடத்தில் ஒப்புத் தந்தேன்.
கருணையுள்ளவரே என் கர்த்தரே உம்மை நான் நேசிக்கின்றேன்.
என்னுள்ளத்தால், என்னெழுத்துகளால், என் அனைத்து கனவுகளால்
உம்மை நான் மகிமைப்படுத்துகின்றேன். இறைவா நீங்க வேண்டும்.
உமக்குள்ளே நான் எந்நாளும் களித்திருப்பவனாக வாழ விரும்புகிறேன்.
என் ஆத்துமாவே, என் முழு உள்ளமே நீ கர்த்தரை ஸ்தோத்தரி!
அவர் செய்த சகல உதவிகளையும் என்றென்றும் நீ மறவாதே!
அதை எல்லோருக்கும் சொல்லி தேவனை மகிமைப்படுத்து!
என் மாம்சமே, நீ தேவனுக்கு முன்பாக தாழ்ந்திருக்க விரும்பு!
ஒருபோதும் மேட்டிமையான சிந்தனைகளால் நிலைத்திருக்காதே!
துன்மார்க்கமான காரியத்தை புதுபோலவும் எண்ணி செயல்படாதே!
துதிப்பாடி, அவருடைய வசனத்தில் என்றென்றும் தியானமாயிரு.
உலகம் என்னை வெறுத்தால் நீ அதற்கு கலங்காமலிரு.
என் தேவனை நீ என்றென்றும் நினைத்து களிகூரு.
என் உயிரானவரே, என் முதலும் முற்றுமானவரே வாழ்க!
ஆதியும், அந்தமுமானவரே உம்மை நான் நினைத்து அகமகிழ்வேன்.
ஆழியும், பேரழிவும் என்னை நோக்கி வந்தாலும் நான் பயப்படேன்.
உலகமே அழியும் காலம் எனக்கு வந்தாலும் நான் பயந்து போக மாட்டேன்.
உற்றார் உறவினர் என்னை விட்டு போனாலும் எனக்கு சொந்தம் நீரே!!
என்னைப்போல எல்லாரும் உம்மை அறிந்துக்கொள்ள விரும்புகிறேன்.
இறைவா, இரட்சிப்பும் வல்லமையும் உமக்கே சேரும்.
என் நினைவும், என் கனவும், என் விருப்பமும் அனைவர் நீர்தானே!
என் உயிருக்கும் மேலானவர் நீர். என்னை நான் அன்பு செய்வதைவிட
உம்மையே நான் அதிகம் அன்பு செய்கின்றேன். அழகு நிறைந்த
உம்மை நான் எந்நேரமும் தரிசிக்க ஆவலோடு காத்திருக்கின்றேன்.
இறைவா உம்மை நான் நேசிக்கின்றேன். உம்மை போற்றுகிறேன்.
இராஜாதி இராஜா கர்த்தாதி கர்த்தா, உமக்கே எந்நாளும் ஸ்தோத்திரம்.

09-08-09

என் உன்னத தேவனே, உம்மை காண என் உள்ளம் விரும்புகிறது.
என் ஆசையெல்லாம் நீர் மாத்திரம் தானே, நீங்க வேண்டுமே அப்பா
என் நினைவுகளிலெல்லாம் உமது நீதியும், உமது நியாயமும், உமது வல்லமையோடும்
கருணையின் தெய்வமே, என் இரட்சகரே நீர் வாழ்கவென்று வாழ்த்துகிறேன்.
என்னை அதிசயமாய் வழி நடத்தி வருகிற தேவன் நீர் மாத்திரம் தானே.
என் ஜெயோனே, என் தனிமையிலும் பெரியவராயிருக்கிற என் இராஜாவே
ஒப்பற்ற உம்முடைய சிறந்த வல்லமையை நான் எண்ணி மகிழ்கின்றேன்
இறைவா, என் நோக்கமும் - என் ஓட்டமும் உம்மை நோக்கி தானே.
என்னுள்ளத்தை நீர் அறிவீர். நீர் என்னை நியாயம் விசாரிக்கிறீர் -
என்னை பரிசுத்தப்படுத்தி, பிதாவின் முன்பாக நீதிமானாக நிறுத்துகிறீர்.
உம்முடைய இரத்தத்தினால் என்னை கழுவி தூய்மைப்படுத்துகிறீர்.
மேற்கிலும், கிழக்கிலும் உள்ள தூரமாக என் பாவங்களை விலக்கினீர்
நான் பரலோக வாழ்விற்கு தகுதி பெற இப்பூமியிலே என்னை பயிற்றுவிக்கின்றீர்.
இறைவா என் தேவனே நீரில்லாமல் எனக்கு வாழ்வேதையா!
இயேசுவே என் குறைகேட்டு விரைந்து என்னை குணமாக்குகிறீர்.
அப்பா பிதாவே உம்மை நான் நேசிக்கின்றேன். விரும்புகிறேன்.
நல்லவரே என் நன்மைகளின் நாயகனே நீர் வாழ்க வாழ்த்திடுவேன்.
நான் உம்மில் நல்லதையே காண்கிறேன், ஏனெனில் நீர் நல்லவர் தானே.
கருணாநிதியே நீர் வாழ்க. உமக்கே எந்நாளும் ஸ்தோத்திரமுண்டாவதாக.
இராஜாதி இராஜனே, என் இரட்சகரே உம்மை தொழுது கொள்கிறேன்.
முழங்கால் படியிட்டு உமது சமூகத்தில் தினந்தோறும் காத்திருக்கின்றேன்.
என்னை தொட்டு தழுவி எப்பொழுதும் என்னுடன் இருக்கின்றீர்,
நான் நடக்கையிலும், இருக்கையிலும், அமர்கையிலும் என்னோடு இருக்கின்றீர்.
நான் படுத்திருக்கும் போதும் என்னோடு கூடவே இருக்கின்றீர்.
உம்முடைய கண்களுக்கு மறைவாக நான் எப்போதும் இருக்கவில்லை.
உம்மையே நான் தியானித்து, உம் நினைவாகவே வாழ்கிறேன்.
நீதியின் சூரியன் என்மேல் உதிக்க நீர் என்னை நீதிமானாக்கினீர்.
நான் வழிதவறி போனாலும் என்னை சரியான பாதைக்கு கொண்டுசேர்க்கிறீர்.
ஜெயோனே என் கதியின் மணவாளனே, என் சிறந்த நண்பனே!
நீர் வாழ்க. உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக.
நீர் மாத்திரம் என்றென்றும் மகிமைப்பட்டவராக வாழ்கிறீர்.
அப்பா பிதாவே என்றென்றைக்கும் பாக்கியத்தை எனக்குத் தந்தீர்.
ஆறுதலை அளித்து என்னை திருப்தி அடையச் செய்கின்றீர்.
நீரே என் நீதிபரர். என் தெய். என் தா, என் குரு, என் போதகர்.
உம்மை நான் நேசிக்கின்றேன். உம்மையே இன்னும் நேசிப்பேன்.
உமக்குள்ளே நான் என்றும் மனமகிழ்வோடு இருக்கின்றேன். ஆமென்.

10-08-09

என் மத்தியஸ்தர் நீர்தானே, என் விருப்பமானவரும் நீர்தானே!!
நீர் ஒரு விக்கிரகம் அல்லவே?! மனுஷனால் உண்டாக்கப்பட்டவர் இல்லையே!!
அல்..பாவும், ஒமேகாவுமாக இருந்து இருக்கிறவராகவே இருக்கின்றீர்.
உம் நினைவில் நான் மனமகிழ்வு அடைகிறேன். நீங்க போதும் இயேசப்பா!!
உம்முடைய நாமம் எனக்கு மிக உயர்ந்த அடைக்கலம்.
உம்மிலே நான் எந்நாளும் சந்தோஷமாக இருக்கின்றேன்.
என் ஜெயாதி ஜெயரை உம்மை நான் துதித்துக்கொண்டே இருக்கிறேன்.
எல்லையில்லா கிருபையினால் என்னை திருப்தியாக்குகின்றீர்.
தாங்கி என்னை நடத்துகின்றீர். தவறாமல் என்னை சிட்சிக்கின்றீர்.
உம்முடைய இரக்கம், மனதுருக்கம் எவ்வளவு மேலானது!
இறைவா உம்மில் நான் தன்னலமுள்ளவனாக இருக்கின்றேன்.
உமக்குரிய காரியங்களில் நான் தன்னலமுள்ளவனாக இருக்கின்றேன்.
தவறாக இருப்பின் என் திருத்தி செம்மைப்படுத்தும்.
நாள்முழுதும் என்னை வழிநடத்துபவர் நீர் மாத்திரமே!!
உம்மை நான் நன்றியோடு துதித்துப்பாடுவேன், அகமகிழுவேன்.
எத்தனையெத்தனை நன்மைகளை எனக்கு நீர் செய்துள்ளீர்.
நல்லவரே எந்நாளும் உமக்குள்ளே நான் செல்வந்தனாக இருக்கின்றேன்.

11-08-09

என்னை காக்கும் கேடகம் நீரே, என் தலையை உயர்த்துகிறவரும் நீரே
உம்முடைய நினைவிலே நான் நித்தமும் சுகமோடு இருக்கின்றேன்.
நான் வாழ்வதும், வாழப்போவதும் உமக்காகத்தானே இயேசையா!!
என் ஜீவனின் அதிபதி நீரே, என்னை காப்பாற்றுகிறவரும் நீரே!
வல்லமையின் ஆவியானவரும் நீரே, சர்வ லோகாதிபதியும் நீரே.
உம்மை நான் பாடி மகிழ்வது எவ்வளவு சந்தோஷமே!
அதையும் காட்டிலும் உம்முடைய சத்தியத்தை நான் அறிந்திருப்பது மிக சந்தோஷம்
இறைவா, எல்லையில்லா கிருபைகளால் என்னை நிரப்பிவிட்டீர்.
உம்முடைய சத்திய வசனங்களினால் என் இருதயத்தை பூரிப்படைய செய்யும்
நானும், என் வீட்டாரும், என் தலைமுறையினரும் உம்மையே அறியணும்
எல்லா நாட்களிலும், எல்லா நிமிடங்களிலும் உம்மை நானே நேசிக்கணும்.
உமக்கு பிரியமானவனாக நான் நடந்து உம்மை மகிழ்விக்க வேண்டும்.
உமக்காக காத்திருந்து, இன்னும் காத்திருந்து உம்மை தேடணும்.
ஆராதனை செய்ய வேண்டும். ஓயாமல் செய்ய வேண்டும்.
துதிக்க வேண்டும். உம்மை அனைவரோடும் சேர்ந்து போற்ற வேண்டும்.
கனி தர வேண்டும். எல்லாருக்கும் சுவைத்திடும் கனியாக நான் மாறணும்.
இந்த கனி உம்மில் நிலைத்திருக்க வேண்டும். உம்மை சேரணும்.
சுவையில் சிறந்த கனியாக நான் மாறணும். ஆமென். அல்லேலூயா.

14. 08. 09

எனக்கு மிக மிக பிடித்தமானவரே, என்ன செய்தாலும் உம்மை நினைக்க தோன்றுகிறது
என்னதான் சொல்ல நினைத்தாலும் உம் வார்த்தையே மனதில் நிற்கிறது.
நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. மிகவும் பலவீனப்பட்டு போனேன்.
இறைவா சோகமாக இருக்கின்றேன். எனக்கு மாமிசம் பாரமாக இருக்கின்றது.
என்னால் தாங்க முடியவில்லை. என் ஆன்மாவை ஸ்தோத்திரிக்கிறேன்.
பசிக்கிறது. என் பசியை நீர் தீர்த்திடும். நான் தாகமாயிருக்கிறேன்.
என் கண்ணோக்கிலே என் முழுதும், முற்றிலுமானவரும் நீர் தானே ஐயா.
யெகோவா யீரே, அனைத்தையும் நீரே பார்த்துக் கொள்வார்.
என் பெலவீனத்தில் உம்முடைய பெலன் பூரணமாய் விளங்குகிறது.
இறைவா என் இயேசு தேவனே, நீர் துதிக்கு பாத்திரர்.
என்றென்றும் நீரே பெரியவர். எப்பொழுதும் நீரே எனக்கு போதுமானவர்.
அன்பே என் ஆறுதலே, என் அடைக்கலமே என் இரட்சகரே
நீர் மாத்திரம் போதுமெனக்கு. நீங்க இல்லாத வாழ்வு எனக்கெதற்கு!
என்னை உம் மகிமையைக் காண பரிசுத்தம் மேல் பரிசுத்தப்படுத்திடும்.
என் பாவங்களை எல்லாம் உங்க நாமமே முறித்து போட்டுவிடும்.
என் தரித்திரம் எல்லாம் உங்க ஆசீர்வாதத்தினால் நீங்கிப் போகும்.
என் வியாதிகளெல்லாம் உங்க வல்லமையினால் சுகமாக்கப்படும்.
என்னை இன்னுமாய் உமக்குள் நெருங்கி வர கிருபை செய்திடும்.
நாள்தோறும் உமது நாமத்தை மகிமைப்படுத்தும் பாக்கிய கிருபை செய்யும்.
நான் உம்முடைய அன்பால் சுகமாய் ஜீவித்திருக்கிறேன்.
எந்நாளும் என் நாவு உம் துதியைப்பாடிக்கொண்டே வரும்.
என் வாய் அந்நிய பாஷைகளை பேசிக்கொண்டே இருக்கும்.
என் மனம் உம்மையே சுற்றிச்சுற்றி வரும். உம்மிலே தங்கும்.
என் மகிமைக்குரியவரே, என்னை நேசிக்கும் பரம தகப்பனே
என் இராஜாதி இராஜாவே, என் தேவாதி தேவனே நீர் வாழ்க.
உம் நாமம் என்றென்றும் மகிமைப்படுத்தப்படுவதாக.
என் பரிசுத்த ஆவியானவரே என் மேல் அசைவாடிடும்.
நான் தாவீதைப்போல நடனமாடி உம்மை ஆராதிப்பேன்.
உம்முடைய அதிசயத்தை காணச் செய்யும். நான் உம்மை போற்றிடுவேன்
உம்மிலே நான் நன்மைகளையே சிந்திப்பேன்.
உம்முடைய வேதத்தில் மனமகிழ்ச்சியாய் நாள்தோறும் இருப்பேன்.
அதை தியானித்து அதன்படி நடக்க பூரணமாக ஒப்புக்கொடுப்பேன்.
என் வாழ்வை உமக்காக நான் ஒப்புக்கொடுத்து வாழ்வேன்.
என் வாழ்வு இவ்வுலகில் ஒரு பிறவை சொற்ப நாள் வரையில்.
ஆனால் நித்திய நித்தியமாய் உம்மோடு சேர்ந்து வாழும்
வாழ்வை காணவே ஆவலோடே காத்திருக்கின்றேன். ஆமென்.

15-08-09

என் இறைவா என் மணவாளரே என் நேசரே நீர் வாழ்க.
உம்மை நான் போற்றி மன ஆழத்திலிருந்து ஆராதித்து துதித்திடுவேன்.
என்னை உம்மிடம் ஒப்புவித்தேன். இனி என்னை நீர் சுத்திகரியும்.
என்னில் உள்ள எல்லா அசுத்தங்களையும் உம்முடைய அக்கினியால் சுட்டெரியும்
எல்லாவித வழியிலும் நான் செல்லேன். உம் பாதையே எனக்கு வெளிச்சம்.
துன்மார்க்கத்தனத்தை விட்டு விலகிச்செல்வேன். உமது நீதியே எனக்கு பெலன்
அக்கிரமம் செய்வதை விட்டு விட்டேன். உம்மை ஆராதிப்பதே என் வாழ்க்கை.
மூடத்தனத்தை விட்டு வெளியேறிவிட்டேன். என்னை சுற்றிலும் அபயம் தந்துவிட்டீர்
பரிகாசம் செய்வதை விட்டேன். இனிமேல் என்னை பரிசுத்தமாய் வைத்துக்கொள்வேன்
பாவிகளின் வழியில் நிற்க மாட்டேன். பிதா உம் சித்தம் நிறைவேற்ற முயற்சி செய்வேன்
காட்டிக்கொடுப்பதை அகற்றி விட்டேன். கிருபை என்னும் உமது அன்பால் நிலைநிற்கிறேன்
தியானி மெய்யாய் உம்மை துதிப்பாடி போற்றி புகழ்ந்து அன்பு செய்வேன்.
அல்லேலூயா சொல்லி உம்மை அன்போடு நான் ஆராதிப்பேன்.
அகந்தையானவைகளை விட்டேன். உம் அருளால் நான் அழகானேன்.
கெட்டதையான சிந்தனைகளை அகற்றி விட்டேன். மேன்மையை நாடுகிறேன்.
இறைவா உம் நினைவாகவே இருக்கின்றேன். நீரே என் எல்லாம்.
பரிசோதனையில் நான் வெற்றி பெற காத்திருக்கின்றேன்.
ஜெயமோ உம்மாலே எனக்கு கிடைக்கும். நீரே எனக்கு உதவி செய்கின்றீர்.
என் பரிசுத்தரே என் பரலோக இராஜாவே என் பரம தகப்பனே நீர் வாழ்க.
உம்மிடத்தில் எனக்கு இளைப்பாறுதல் உண்டு. நீரே என் அடைக்கலம்.
நான் நிற்பதும் நிர்மூலமாகாமலிருப்பதும் உமது அன்பு கிருபை.
என் எல்லாவற்றிலும் உம்மையே நான் நேசிப்பேன். மகிழ்வேன்.
அப்பா பிதாவே என் அன்பே என் ஆண்டவரே நீர் வாழ்க வாழ்க.
உமக்குள்ளே நான் எத்தனை இன்பமுள்ளவனாக ஆனேன்.
நீர் எனக்கு செய்த சகல உபகாரங்களையும் மறவேன்.
எப்பொழுதும் நன்றி உள்ளத்தோடு உம்மை தொழுதுகொள்வேன்.
வானமும், பூமியும் மாறினாலும், என் வார்த்தைகள் ஒருபோதும் மாறாது என்றீர்.
இறைவா. உம் வார்த்தைகளால் உருவாகி வரும் என் உள்ளான மனுஷன்
ஒருபோதும் மாறாதவனாய் உம்மில் நிலைக்கொள்ள வேண்டும்.
நான், என் வீடு, என் ஊர், என் தேசம், என் ஜனங்கள்
எல்லோருமாய் உம்மிடம் சேர வேண்டும். வழி காட்டும்.
என் இயேசு என்னோடு கூட இருக்கின்ற காரணத்தால்
நான் எல்லாவிதமான ஐசுவரியத்தாலும், ஞானத்தாலும் நிறைவு கொள்வேன்
என் நேசர் நீர் என்றும் உம்மை அன்பு செய்வேன்.
நான் உம்மையே என் வாழ்நாள் முழுதும் தொழுதுகொள்வேன்.
என் தலைமுறைக்கும் நீர் கிருபை செய்ய வேண்டும். ஆமென்.

15-08-09

என் இயேசு மகா இராஜனே என் புதிய ரூபமானவனாக மாற்றினவரே.
உம் நாமம் என்றென்றும் மகிமைப்படுத்தப்படுவதாக. ஆமென்.
நித்திய நாள், வாரம், வருடம், காலமாக உம்மை நான் பாடுவேன்.
உம்மை நான் ஆராதிப்பேன். உம்மையே சார்ந்துகொள்வேன்.
நீர் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையல்ல. நீரே என் வாழ்க்கை.
உம்மை அன்பை ருசிக்காத ஜீவன் ஒரு ஜீவனில்லை.
உலகம் உம்மை எவ்வளவு வெறுத்தாலும் அவ்வளவாய் நான் உம்மை அன்பு செய்
யார் என்னை கைவிட்டாலும் நீரென்னை ஒருபோதும் கைவிடமாட்டீர்.
உம்மை நான் அதிகமாக, மிக அதிகமாக நேசிக்கின்றேன்.
என் மேய்ப்பரே என் எஜமானனே என் இயேசு இராஜாவே
உம்மை நான் சந்திக்கும் நாளை ஆவலோடே எதிர்பார்க்கின்றேன்
ஆராதனைக்குரியவரே என் அன்பு தேவரே நன்றியோடு நானிருப்பேன்
கனிதரும் மரமாக உமக்காக செழித்து வளம் பெறுவேன்.
அழைத்ததும் விலையேறிய கனியாக உமக்குள் நலம் பெறுவேன்.
உம்மை நான் அழகாக எண்ணி அன்பு கூருவேன்.
உமது நீதியின் நிமித்தம் நான் வாழ்வு பெற்றுக்கொள்வேன்.
என்னில் இருளான யாவற்றையும் மாற்றி பிரகாசப்படுத்திடும்.
நான் உம்மிலே நிலைத்திருக்க ஜீவ ஒளியை தந்தருளும்.
என் தலையை சுற்றிலும் உமது மகிமை விளங்கி வரட்டும்.
என் ஆராதனைக்குரியவரே, உம்மையே நம்பியிருக்கின்றேன்.
எல்லையில்லா உம்முடைய சத்துவத்தினாலே என்னை திருப்தியாக்கு
வாழ்வு தரும் வசனங்களை என் இருதயம் பெற்றுக்கொள்ளட்டும்.
நன்றி நன்றி நன்றி உமது நாமம் என்றென்றும் மகிமையடையட்டும்
நீர் வாழ்க உமது அரசு இப்புவியில் வருவதாக. ஆமென்.
உலகம் எத்தனை வழியாக போனாலும் உம் வழியே எனக்கு வேண்டும்
ஐயரே என் அருகினில் பிரியமானவராக இருப்பவரே நீர் வாழ்க.
உம்முடைய சித்தம் இப்புவியிலே நிறைவேறுவதாக. ஆமென்.
அதிசயங்கள் செய்கின்றீர் எனக்கு கிருபையும் அளிக்கின்றீர்
உம்மை நான் விருப்பத்தோடே ஆராதனை செய்து அகமகிழ்வேன்.
நன்றி நன்றி என்று உம்மை துதியோடு போற்றுவேன்.
ஆமென். உம்முடைய வழியே எனக்கு வெளிச்சம், நீரே என் தீபம்.
உம்மை நான் அடைக்கலமாக்கிக்கொண்டேன். உம் சித்தம் நீர் செய்வீர்.
என்னை உம் பிரியமானவனாக ஏற்றுக்கொண்டீர். நீர் வாழ்க.
உம்முடைய சர்வ வல்லமை பார் முழுமைக்கும் தெரிய வருவதாக.
இயேசுவே உமது மகிமையை என் கண்கள் காண்பதாக.
நான் உம்மை தேடுவேன் என் வாழ்நாளெல்லாம். ஆமென்.

17.08.09

என் நம்பிக்கைக்குரியவரே உம்மையே நான் நம்பியிருக்கிறேன்.
ஏனெனில் நீர் ஒருவரே என் குடும்பத்தை ஏமாற்றாதவர்.
நானும் என் குடும்பமும் எத்தனையோ முறை எத்தனையோ பேர்களிடம்
ஏமாந்து, நொந்து. மனம் மடிந்து, கஷ்டங்களுக்கு உள்ளானோம்.
இறைவா நீரே என்னையும், என் குடும்பத்தையும் ஏமாற்றாதவர்.
என்னை இரட்சித்து, என் குடும்பத்தையும் இரட்சித்து உமதாக்கிக்கொண்டீர்.
விலையேறப்பெற்ற உமது இரத்தத்தினாலே எங்களை கழுவினீர்.
எங்கள் குடும்ப கட்டுகளை, சமுதாயக் கட்டுகளை உடைத்தெறிந்தீர்.
பாவ இருளில் இருந்து பரிசுத்த வெளிச்சத்திற்கு அழைத்து வந்தீர்.
எந்நாளும் உம்மையே நினைத்திருக்க கிருபை செய்தீர்.
என்னோடு என் நண்பர்களைப்போல எப்பொழுதும் கூடவே இருக்கின்றீர்.
ஆண்டவரே என் ஆத்தும மணவாளனே, என்னை பரிசுத்தம் செய்தீர்.
உமக்கு பிரியமான மகனாக என்னை அழைத்து தெரிந்துக்கொண்டீர்.
உம்முடைய சித்தத்தை செய்கின்ற மகனாக மாற்றி வருகின்றீர்.
இயேசுவே உம்மாலே தான் நான் நிறைவை காண்கின்றேன்.
உம்மையன்றி எனக்கு வேறு தெய்வமும் இல்லை. வழியும் இல்லை.
இராஜாதி இராஜா, தேவாதி தேவா என் இரட்சகரே,
என் நேசமணாளனே, என் இயேசு இராஜனே, என் ஏக்கம் நீர்தானே
உமது வழியில் எனக்கு எத்தனை ஒரு பேரானந்தம்.
உமது வெளிச்சத்தில் எனக்கு எத்தனையொரு கிருபை.
உமக்குள்ளே நான் ஆடி உம்மிலே எந்நாளும் நிலைத்திருப்பேன்.
நான் மரித்துப்போகும் நாளை ஆவலோடே எதிர்பார்க்கின்றேன்.
என் மாம்சம் என்னை விட்டு நீங்கிப்போகட்டும்.
என் பாவ-கீழ்ப்படியாமை என்னை விட்டு முற்றிலும் அகன்று போகட்டும்
என் சாபக்கட்டுகளை உடைத்து தூளாக விட்டுப்போகட்டும்.
இறைவா என் ஆசை உம்மை என் மனம் முழுவதுமாக ஏற்கட்டும்.
நான் பாவி, நான் துரோகி, நான் கீழ்ப்படியாமையின் மகன்.
ஆனாலும் நீர் இரத்தம் சிந்தி என்னை மீட்டுக்கொண்டீர்.
நான் சிறுக வேண்டும். நீர் பெருக வேண்டும். உம் நாமம் வாழ்க.
பூமியெங்கும் உமது நாமம் மகிமைப்படுத்தப் படட்டும்.
உமது கிருபை மேலானது. உமது அன்பு மேலானது.
எல்லையில்லா உமது இரக்கத்தினால் நான் வாழ்வு பெற்றேன்.
இயேசு இனி உம்மைப்போல பரிசுத்த வாழ்க்கை வேண்டுமே!
இவ்வுலகத்தை ஜெயிக்கணுமே! இவ்வாழ்வை சுமக்கணுமே.
ஆண்டவரே என்னை நீர் ஆளுகை செய்யும். அல்லேலூயா
உம் அடிமை என்றென்றுமாக ஏங்கி நிற்கும் உமது பிள்ளை. ஆமென்.

18.08.09

என்மேல் நீடிய பொறுமையோடே இருந்து என்னை பரிசுத்தம் செய்பவரே!
உம்முடைய அக்கினியால் என்னை புடமிட்டு புடமிட்டு ஜொலிக்கச் செய்பவரே
உம்முடைய இராஜ்ஜியம் வாழ்க. உம்முடைய கிருபை காலைதோறும் புதியது.
அன்பரே என் ஆண்டவரே நீர் வாழ்க உம்முடைய அரசும் வாழ்க!
இராஜாதி இராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக மகிமை கொண்டிருக்கும்
என் இயேசு மகா இராஜனே, உம்மை வாழ்த்தி போற்றுகிறேன்.
உம்மிடத்தில் நான் சமாதானத்தோடே, சந்தோஷமாக இருக்கின்றேன்.
என் நீதியின் அரசரே, நித்திய மகிமையை கொண்டிருப்பவரே
உம்முடைய நீதியை நான் விரும்புகிறேன். பாவம் செய்வதை வெறுக்கிறேன்.
நல்வழியில் நடக்க உறுதியாயிருக்கிறேன். நன்மைகளை செய்ய விரும்புகிறேன்
ஓயாது உம்மை ஆராதனை செய்ய ஆவலோடே காத்திருக்கின்றேன்.
இறைவா உம்மிலே நான் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கிறேன்.
கருணை உள்ளத்தோடு இருப்பவரே என் நேசரே, என் மணவாளரே
புதுவராக பெரிய காரியங்களை நீர் செய்திருக்கின்றீர்.
இன்மேலும் செய்வீர். ஏனெனில் நீரே சர்வ சிருஷ்டிகர்.
வெற்றியவரே என் இயேசு இராஜனே நீர் வாழ்க வாழ்கவென்பேன்
தூயரே என் துதியில் பிரியமானவராக இருப்பவரே ஸ்தோத்திரம்.
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்றும் ஓயாமல் முழங்கனும்
உம்முடைய அக்கினியில் என்றென்றும் கலந்திருக்க வேண்டும்.
உம்மை அறியும் அறிவிலே நான் வளர வேண்டும்.
நித்திய ஞானத்தை பெற்று இவ்வுலகிலே சந்தோஷமாக மடியணும்,
தேவனே என் மெய்ப்பொருளே என்னை எடுத்துக்கொள்ளும்.
நான் வாழ்ந்தாலும் உம்மோடுதான், மறைந்தாலும் உம்மிலே உயிரடைவேன்.
சர்வ வல்லவராம் என் இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் உள்ளார்.
எனக்காக மரணத்தையும் சிறப்பாக சிலுவையில் செய்து முடித்தார்.
அறிந்துக் கொண்டேன். தெளிவாக புரிந்துக் கொண்டேன். நீர் வாழ்க.
சீரான வாழ்க்கையை நீர் கற்பித்திருக்கின்றீர். நீர் வாழ்க வாழ்க.
உம்மாலே நான் புது ஜீவனுக்கான பரம பெலனை தந்திருக்கின்றீர்.
எல்லா நாட்களிலும் இறைவா நான் உம்மோடே இருக்கணும்.
அதிக நேரம் உமக்காக செலவிடணும். உம்மையே போற்றிடணும்.
கருணாநிதியே, கற்பனைகளை கொண்டவரே நான் உம் பிள்ளை.
பாவம் நிறைந்தவனான என்னை பரிசுத்த மகனாக மாற்றினீர்.
நான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று நான் அறிவேன்.
ஆனால் கர்த்தரே இந்த அடிமையை நீர் பயணிக்க பயன்படுத்துகிறீர்
நீரே என் தேவன். நீர் ஒருவரே ஜீவாதி தேவன். ஸ்தோத்திரம்.
நான் முழுவதும் உம் நினைவாகவே இருக்க விரும்புகிறேன். ஆமென்.

19-08-09

மெய்யாகவே நான் ஆராதிக்கும் தேவன் நல்லவர். எல்லாரின் கைகளும் ஆவிப்பவர்.
நீரே என் ஜீவன். நீரே என் இரட்சகர். நீரே என் இராஜாதி இராஜா
மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருப்பவரே உமக்கே ஸ்தோத்திரம்.
உம்முடைய கிருபையினால் என்னை சூழ்ந்துக்கொள்ளும். நீரே நல்லவர்.
உம்முடைய நிழலில் எனக்கு எந்நாளும் இளைப்பாறுதல் உண்டு.
உம்மிடத்தில் எனக்கு எந்நாளும் சுதந்தரம் உண்டு. உம் மகனாக என்னை
மாற்றி நாள்தோறும் என்னை பரிசுத்தம் செய்து வருகிறீர். ஆமென்.
நான் உம்முடைய சந்நிதிக்கு காலமே எழுந்து வருவேன்.
பக்தியோடும், பயத்தோடும் உம்மை தொழுதுக்கொள்வேன்.
ஸ்தோத்திரப் பலியோடும் துதியோடும் உம்மை ஆராதிப்பேன்.
உறங்காமல் உம்முடைய பாதத்தில் பக்தியோடு காத்திருப்பேன்.
என் இறைவா, என் இராஜாவே உமக்கு கோடான கோடி நன்றிகள்.
உம்மை நான் நன்றியோடே நமஸ்கரித்து உற்சாகமாக திரும்புவேன்
ஆண்டவரே என் இராஜாவே உமக்கே என் நன்றிகளை ஏறெடுக்கிறேன்.
உம்முடைய பிரசன்னத்தில் நாள்தோறும் நான் நிம்மதியடைகின்றேன்.
நீரே என் ஆற்றலின் தேவன். என் நம்பிக்கைக்குரியவர்.
உலகம் என்ன சொன்னாலும் நான் உம்மை விட்டுவிடமாட்டேன்.
ஏனெனில் மெய்யானதை நான் அறிந்துக் கொண்டேன்.
என் தேவனை நான் அறிந்துக்கொண்டேன். என் இரட்சகரை நான் அறிவேன்
என்னை படைத்தவரை நான் அறிவேன். என்னை நேசிப்பவரை நான் அறிவேன்
அன்பே என் ஆறுதலே நான் உம்மிடத்தில் அன்புடன் இருப்பேன்.
உம்முடைய வார்த்தையின் படி நடந்து உம்மை மகிமைப்படுத்துவேன்.
உம்மை கனம் செய்து உம்முடைய பாதபடியில் அமர்ந்துக்கொள்வேன்
உம்மையே நினைத்து உம்முடைய அரண்மனை வாசலில் காத்திருப்பேன்.
உம்மருகில் நான் வரக் கூடாதே! இறைவா பாக்கியம் தரமாட்டீரோ
இறைவா நித்தம் நித்தம் உம்மையே சுற்றிச்சுற்றி வருகிறேன்
உம்முடைய அமைதியான பாதையில் நான் நடந்து களிகூருவேன்
உம்முடைய இரத்தத்தின் மகிமையால் என்னை காத்துக்கொண்டீரே.
உம்மையே நான் வேண்டி விரும்பி எதிர்நோக்குகின்றேன்.
உம்மையன்றி நான் ஒன்றையுமே விரும்புவதில்லையென்று அறிந்திருக்கின்றீர்.
ஆண்டவரே அதிசயங்கள் செய்பவரே நீர் வாழ்க வாழ்கவென்று வாழ்த்துவேன்
மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் என் மகா இராஜனே
கிருபையின் தேவனே உம்மை நான் நேசிக்கின்றேன்.
வானம், பூமியை படைத்த என் தேவன் நீர் மாறாதவர்.
இதோ என் கொடுமைகளை மன்னியும்.
நான் உமக்கு பிரியமான பிள்ளையாக வாழ்வேன். ஆமென்.

20-08-09


இறைவா உம்மை நான் நேசிக்கின்றேன். நீர் நீதியுள்ளவர் என்பதால்,
பரிசுத்தமான என் இயேசு மகாராஜாவின் பிள்ளை நான்.
நான் இவ்வுலகத்திற்குரியவனல்ல. நான் உமக்குரியவன்.
நான் நல்லவன் அல்ல. உம்மைத்தவிர நல்லவர் இவ்வுலகிலும் இல்லை.
நான் கிருபைகளை நாடி அலைகிறவன். நீரோ மேலானவர்.
உம் மேன்மைகளை நேசிக்கிறேன். உமக்குரிய துதிகளை ஏறெடுக்கிறேன்
இறைவா உம்முடைய ஜீவ புஸ்தகத்தில் என்னையும் எழுதிக்கொள்வீரா!
நான் எப்பொழுதும், எந்நேரமும் உம்மையே வேண்டி விரும்புகிறேன்.
ஆண்டவரே, அதிசயங்கள் செய்பவரே நீர் வாழ்க வாழ்கவென்பேன்.
உம்முடைய நன்மையானவைகளை நான் நாடி அலைகிறேன்.
நாள்தோறும் உம்முடைய வசனங்களை கேட்க ஆசைப்படுகின்றேன்.
இறைவா என் ஜீவனிலும் மேலானவரே என்னை பரிசுத்தமாக்குங்கள்.
நான் உம்முடைய இரத்தத்தில் நாள்தோறும் பரிசுத்தமாக்கப்பட்டு வருகிறேன்.
இறைவா எனக்காக யாவற்றையும் சிறப்பாக செய்து முடித்தவரே.
உம்மை நான் வாழ்த்தி உம்முடைய இராஜ்ஜியத்தை விரும்புகிறேன்.
இறைவா உம்முடைய ஊழியனை நீர் பரிசுத்தப்படுத்துங்கப்பா!!
சாத்தானைப்போல தேவ மகிமையை இழந்துபோக நான் தயாரில்லை.
என் இயேசுவைப்போல பரிசுத்தராக வாழவே ஆசைப்படுகிறேன்.
இறைவா உம்மை நான் விரும்புகிறேன். அதுவே காரணம்.
இவ்வுலகம் ஏன் உம்மை இன்னும் அறிந்துகொள்ளவில்லை?!
கல்வாரியின் அன்பை ஏன் அவர்கள் ஏற்பதில்லை?!
அதனுடைய இரகசியத்தை உலகத்திற்கு வெளிப்படுத்தும் இறைவா!!
என்னுடைய மகிமையானவரே எனக்கேற்ற வெற்றி சிறந்தவரே!
இறைவா, உமக்காக ஒரு ஜனம் கூட்டமல்ல, இவ்வுலகத்தையே
தயார்படுத்தி உம்மை ஆராதிக்க என்னை பயன்படுத்தும்.
அதற்காக இன்னும் நான் உம்மில் காத்திருப்பேன்.
என் தேவனே, என் அன்பே உருவான என் இயேசு கிறிஸ்துவே
உம்மை நான் நேசிக்கிறேன். உம்மை நான் அன்பு கூறுகிறேன்.
இறைவா சர்வ வல்லவரே, என்னை விரும்புகிற என் நேசனே
உம்மை நான் ஆராதித்து துதித்து அக மகிழ்வேன்.
உம் சமூகத்தில் உமக்காக காத்திருப்பது எவ்வளவு சந்தோஷமே!
என் மணவாளன் வரும்போது நான் அவரை பணிந்துகொள்வேன்.
என் அருமை மணவர். உதயின் தேவன் யாக்கோபின் தேவனானவர்
என் பிள்ளைகளை காட்டிலும் உம்மை நான் அதிக அன்பு செய்கிறேன்.
இறைவா உம்மிடத்தில் எனக்கு பூரண சமாதானம் உண்டு.
நான் நம்புகிறவர் இன்னார் என்று நான் நன்கு அறிந்துள்ளேன்.

21-08-09

தேவனே என் மகிமையான தேவாதி தேவனே உம்மை வாழ்த்துகின்றேன்
காலை நேரத்தில் உமக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கின்றேன்
உம்மை என் ஜீவனின் அதிபதியாக கொண்டிருக்கிற நான் பாக்கியவான்
என்றைக்கும் நான் பாவத்தில் சிக்கியுள்ள பரிதாப மனிதனாக உள்ளேன்
இறைவா என்னை விடுவியும். நான் இங்கிருக்க விரும்பவில்லை.
இறைவா என்னை சூழ்ந்துள்ள பாவங்களை நான் வெல்ல முடியாதவன்.
என் மாம்சமும் அந்த பாவங்களை ரசித்துக்கொள்கிற பாத்திரமாக உள்ளதே
இறைவா உம்மை நான் விரும்புகிறேன். பரிசுத்தத்தையே விரும்புகிறேன்
பின்னோக்குகின்ற மனிதன் நான் அல்லவே. உம்மை நான் நோக்குகின்றேன்
இறைவா உம்மை நான் தரித்திருக்கிறேன். என் பாவத்திலிருந்து பிரித்திடும்.
என்னில் எங்குமே இருள் இல்லாதிருக்கும்படி செய்யும்.
நான் உமக்கு சொந்தமானவன். உமக்கு பிரியமானவன். ஆமென்.
இறைவா என் இரட்சகரே உம்மை நான் நேசிக்கிறேன். ஆமென்
நான் நிர்மூலமாகாமல் இருப்பது உமது கிருபையால் தானே!
தேவனே உம் கிருபையால் நான் வாழ்கிறேன். உம்மாலே நான் பரிசுத்தமானேன்
இராஜாதி இராஜா என் இரட்சிப்பும் பெலனுமானவரே ஆமென்.
உம்மை நான் அன்போடு வரவேற்கின்றேன். அல்லேலூயா.
ஆண்டவரே உம்மை துதித்து போற்றுகின்றேன். உமக்கே நன்மையாவதாக.
இறைவா நான் செய்வதை நானே அறியேன். நீர் பயிற்றுவிக்கின்றீர்!

22-08-09

எனக்குள்ளே நீர் மிகவும் என்னை இரசிக்கின்றீர். நீர் வாழ்க.
உம்முடைய மெய்யான ஞானத்தை நான் அறிந்துகொண்டேன்.
இன்னும் அறியப்பட வேண்டிய விஷயங்கள் உமக்குள் ஏராளம்.
என் இரட்சகரும், என் பெலனுமானவர் நீர் மாத்திரம் தானே இயேசையா.
உம்மிலே நான் எப்பொழுதும் உம்மை நேசிப்பவனாக இன்னும் வளர வேண்டும்.
கனிதரும் மரமாக, செடியாக, கொடியாக உம்மில் வளர்ந்தோங்க வேண்டும்.
என் ஆரம்பமும், என் முடிவும் நீரே. நீரோ என்றும் முடிவில்லாதவர்.
உம்மை நான் ஆராதித்து இக்காலை வேளையில் அன்பு கூர்கிறேன்.
வருகின்ற நாட்களில் உம்மோடே நான் அதிக நேரம் செலவிட வேண்டும்.
துபாயில் இருந்ததைக் காட்டிலும், தோஹாவில் அதிகம் உம்முடன் வாழுவேன்-
[illegible], அப்பா பிதாவே உம்மை நான் ஆராதிக்கின்றேன்.
உம்மை நான் எப்பொழுதுமாக நேசித்து அழைக்கின்றேன். நன்றி
என் ஜீவனின் பெலனானவர் நீரொருவர் தானே வாழ்க வாழ்க.
இறைவா உம்மை நான் நேசிக்கின்றேன். உம்மில் அகமகிழுவேன்.
நான் நிற்பதும் நிர்மூலமாகாமலிருப்பதும் உமது சுத்த கிருபையே!
இராஜாதி இராஜா தேவாதி தேவா நீர் மாத்திரம் எனக்கு போதும். ஆமென்.


Echoes of
Endurance
கடவுளின் ஒருமை—பிதா, மகன், பரிசுத்த ஆவி—
மூவரும் ஒருவராய்,
பிரிந்த பாதைகளை ஒன்றாக
இணைத்து, அனைவரையும் வீட்டிற்கு அழைக்கின்றனர்